Registered as a News Paper in Sri lanka
விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banquet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2278)

முரசு - 03 | திருவள்ளுவர் ஆண்டு 2044 | பங்குனி 07 புதன்கிழமை (20.03.2013) | பக்கங்கள் 20 | ஓசை - 171












# யுத்தக்குற்ற விசாரணையை கைவிட்டது அமெரிக்கா



(ஜெனிவா)

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமை கூட்டத்தொடரில் அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணையில் யுத்தக்குற்ற விசாரணை வேண்டும் என்ற கோரிக்கை அகற்றப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே அமெரிக்கா சமர்ப்பித்த மேற்படி பிரேரணையின் நகல் பிரதியில் இப்போது நான்காவது தடவையாகவும் திருத்தம் செய்யப்பட்டிருக்கின்றது. இத்திருத்தத்தின்போதே இலங்கை அரசு மீதான யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான சுயாதீன சர்வதேச விசாரணை வேண்டும் என்ற கோரிக்கை நீக்கப்பட்டிருக்கிறது.

இந்திய அரசின் தொடர்ச்சியான இராஜதந்திர முயற்சியின் பயனாக மேற்படி பிரேரணையில் திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டதாகக் கருதப்படுகிறது.

கடந்த 2009 ஆம் ஆண்டு நடந்த இறுதிக்கட்ட போரின்போது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஜெனிவாவில் கடந்த மாதம் 22 ஆம் திகதி முதல் நடந்து வரும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் கூட்டத்தில் அமெரிக்கா தீர்மானம் கொண்டு வர உள்ளது. முன்னதாக இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் தொடர்பாக ஐ.நா.மனித உரிமைகள் ஆணையர் நவநீதம்பிள்ளை 18 பக்கங்கள் கொண்ட

(19) ஆம் பக்கம் பார்க்க

## வெளியேறியது தி.மு.க. இந்திய அரசுக்கு தலையிடி


இந்திய மத்திய கூட்டணியிலிருந்து தி.மு.க. விலகியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மத்திய அரசாங்கத்தில் அமைச்சர்களாக உள்ள திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தமது அமைச்சர் பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் அமெரிக்கா கொண்டு வந்திருக்கும் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச சுயாதீன விசாரணை கோரும் திருத்தத்தை இந்தியா கோராவிட்டால் மத்திய கூட்டணியில் தி.மு.க தொடராது என்று தி.மு.க தலைவர் கருணாநிதி கடந்த வெள்ளிக்கிழமை எச்சரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் மத்திய அமைச்சரவையில் இருந்து திராவிட முன்னேற்றக் கழகம் வெளியேறுவதாக அறிவித்துள்ளமையை மதிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதியின் இந்த அறிவிப்பை தாம வரவேற்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் இருந்து விலகுவது தொடர்பான தி.மு.க.வின் அறிவிப்பு தொடர்பில் ஜெனிவாவில் உள்ள சுமந்திரன் இந்திய ஊடகத்திற்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

## கவிழாது ஆட்சி சிதம்பரம் நம்பிக்கை



கூட்டணி அரசாங்கத்திலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் விலகிய போதிலும் மத்திய அரசாங்கம் ஸ்திரமான நிலையில் இருப்பதாகவும் அரசு கவிழும் நிலை உருவாகாது என்றும் இந்தியாவின் நிதியமைச்சர் ப.சிதம்பரம் குறிப்பிட்டுள்ளார். இந்திய நாடாளுமன்றத்தின

(19) ஆம் பக்கம் பார்க்க

## கருத்துக்கூற சோனியா மறுப்பு



இந்திய மத்திய அரசில் இருந்தும் ஐக்கிய முற்போக்குக் கூடணியில் இருந்தும் தி.மு.க. வெளியேறியிருப்பது குறித்து கருத்து தெரிவிக்கமுடியாது என்று கூட்டணியின் தலைவரும் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான சோனியா காந்தி தெரிவித்துள்ளார். டில்லியில் நேற்று தி.மு.க.வின் விலகல் குறித்து செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து இப்

(19) ஆம் பக்கம் பார்க்க

## தேசிய அருங்கலைகள் பேரவையின் கைப்பணிப் பொருட்களின் கண்காட்சி



பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள தேசிய அருங்கலைகள் பேரவை ஏற்பாடு செய்துள்ள தேசிய கைப்பணியாளர்களது உற்பத்திகள் அடங்கிய கண்காட்சி நேற்றைய தினம் கொழும்பு, லயனல் வென்ட் கலை மண்டபத்தில்

(19) ஆம் பக்கம் பார்க்க

## கனேடிய அதிகாரிகள் குழு இன்று யாழ்ப்பாணத்தில்

(கொழும்பு)

கனேடிய வெளியுறவு அமைச்சைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் குழு ஒன்று இன்று யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்யவுள்ளது.

யுத்தத்துக்குப் பின்னர் வடக்கில் ஏற்பட்டிருக்கும் சமூக பொருளாதார முன்னேற்றங்களை மதிப்பீடு செய்யும் நோக்குடன் இக்குழுவினர் வடக்கு நோக்கி இன்று விஜயம் செய்கின்றனர்.

இக்குழு நேற்று முன்தினம் கொழும்பு வந்ததாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பது தொடர்பில் ஆராயும் நோக்கில் கனடா தனது பிரதிநிதியை இலங்கைக்கு அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவ்விஜயத்தின் போது

(19) ஆம் பக்கம் பார்க்க

## வடக்கின் அபிவிருத்தி யு.எஸ்.எயிட் அதிகாரிகள் களநிலை ஆய்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் யுத்தத்திற்குப் பிந்திய அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான களநிலைவரம் அறிந்துகொள்வதற்காக யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளனர்.

மேற்படி யு.எஸ்.எயிட் நிறுவனப்பிரதிகளுக்கும் வடமாகாணப் பிரதம செயலாளருக்கும் இடையிலான விஷேட கலந்துரையாடலொன்று நேற்று வடமாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் குறித்து நிறுவனப் பிரதிநிதிகள் வடமாகாண பிரதம செயலாளர் ஆர்.விஜயலட்சுமி மற்றும் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோருடன் கலந்துரையாடினர். (இ)

# மனித உரிமைகளை மேம்படுத்த சிவில் சமூக ஆதரவு அவசியம்

## மனித உரிமைகள் ஆணைக்குழு ஆணையாளர்

(கிளிநொச்சி)

காணாமற்போனவர்கள் தொடர்பில் உடனடியாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவினால் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. ஆனால், சாட்சியங்களுடன் பதிவுகளைச் செய்யும்போது உரிய முறையில் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளரும் ஓய்வு பெற்ற பொலிஸ் மா அதிபருமான ரி.ஈ.ஆனந்தராஜா தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் இடையிலான சந்திப்பு கிளிநொச்சி லெபரா நூலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு கூறினார்.


அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மனித உரிமை நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு சிவில் சமூகத்தின் ஒத்துழைப்பும் ஆதரவும் அவசியமானது. மனித உரிமைகளைப் பாதுகாக்கும் செயல் என்பது ஒரு கூட்டு நடவடிக்கையே ஆகும். பலதரப்பினருடைய ஒத்துழைப்பின் மூலமே மனித உரிமைகளை முறையாகப் பேணமுடியும். அதனால் சிவில் சமூக அமைப்புகளின் ஒத்துழைப்பு இதற்கு அவசியமானது.

இந்த வருடம் கிளிநொச்சியில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்தியத்திற்கான அலுவலகம் திறக்கப்படும். அது நிரந்தர அலுவலகமாகச் செயற்படும்.

அதற்கு முன்னதாக வாரத்தில் ஒரு நாள் இயங்குகின்ற கிளிநொச்சி உப அலுவலகம் ஐந்து நாட்களும் இயங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொளளப்படும் என்றார்.


இந்நிகழ்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ், வவுனியா பிராந்திய இணைப்பாளர் றோகித பிரியதர்சன மற்றும கிளிநொச்சி மாவட்ட சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





சாவகச்சேரி மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலய பங்குனித் திங்கள் உற்சவம் நேற்று இடம்பெற்றபோது அம்பாள் காமதேனு வாகனத்தில் எழுந்தருளுவதைக் காணலாம். (படங்கள் - ஆர்.ராஜகுமார்)

# யோகசுவாமிகளது 49 ஆவது குருபூசை



(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் சனிக்கிழமை பங்குனி ஆயிலிய நாள் (23.03.2013) எங்கள் குருநாதனது 49 ஆவது குருபூசை நாள் அன்று முற்பகல் 9.00 மணி முதல் சிவதொண்டன் நிலையத்து புராணமண்டபத்தில் சுவாமிகளது திருமேனிக்கும் கொழும்புத்துறை ஆசிரமத்தில் திருவடிக்கும் திவ்வியமான அபிஷேக ஆராதனை நிகழும். நண்பகல் பொழுதில் மகேசுர பூசையும் அன்னதானமும் நிகழும்.

சிவதொண்டன் நிலையத்தில் குருபூசைக்கு முந்திய 3 நாட்களும் (20.03.2013 - 22-.03.2013) வழமைபோன்று ஆசிரம வாழ்வு நாட்களாக அனுஷ்டிக்கப்படும். இந்நாட்களில் பூசை, நாள்வாய்ப் பாராயணம், நற்சிந்தனை முற்றோதல், தியானம் என்பன நிகழும். ஆசிரமத்தில் தங்கும் அடியார்கள் மாலை 6.00 மணி முதல் 8.00 மணிவரையுமான நேரத்தை சுவாமிகளது திருவார்த்தை கேட்டலும் திருநாமம் தயாரித்தலுமான தவப்பொழுதில் பயன்படுத்துவர்.

# ஆரோக்கிய வாழ்வு நிலையம் யாழில் இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

ஆரோக்கிய வாழ்வு நிலையம் இன்று காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வின்போது பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் ஆர்.விஜயலட்சுமி, யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சுகாதார அமைச்சு செயலாளர் ஆர்.ரவீந்திரன் மற்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திருமதி எஸ்.ஆர்.யூ ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (26)

# "நன்றாக தமிழ் செய்வோம்" மாணவர்களுக்கான இலக்கியப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் யாழ். மறை மாவட்டமும் இணைந்து நடத்தும் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாவை ஒட்டி பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடத்தப் படவுள்ளது.

இந்தப் போட்டிகளுக்கான நிபந்தனைகள்

1.பாடசாலை மாணவர்கள் மாத்திரம் இப்போட்டியில் பங்கேற்கலாம்.

2. போட்டிகள் 4 பிரிவுகளாக இடம்பெறும்.

கீழ்ப்பிரிவு: தரம் 4, 5 (பேச்சுப் போட்டி மாத்திரம்), மத்திய பிரிவு: தரம் 6, 7, 8 (பேச்சு, கட்டுரைப் போட்டிகள்), மேற்பிரிவு: தரம் 9, 10, 11 (பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகள்), அதிமேற்பிரிவு: தரம் 12, 13 (பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகள்).

3. ஒரு பாடசாலையிலிருந்து ஒரு பிரிவுக்கான போட்டியில் ஒருவர் மாத்திரம் பங்கேற்கலாம்.

4. போட்டிகளுக்கான விண்ணப்பங்களை ஏ4 தாளில் தயாரித்து பாடசாலை அதிபர்கள் உறுதிப்படுத்தி இரட்டைப் பிரதிகளில் இணைப்பாளர், தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாக் குழு, புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு போட்டி இணைப்பாளர், தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாக் குழு, புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். (மாதிரி விண்ணப்பப் படிவத்தை பார்வையிடவும்)

5. மாவட்ட மட்டப் போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 இடங்களைப் பெறும் வெற்றியாளர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

போட்டிகளுக்கான விடயப் பரப்பு

கீழ்ப்பிரிவு - பேச்சு

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார், தமிழாய் வாழ்வோம், ஒன்றே குலம் (மேற்காட்டிய தலைப்புக்களில் நடுவர்களால் வழங்கப்படும் ஒரு தலைப்பில் 5 நிமிடங்கள் பேசவேண்டும்)

மத்திய பிரிவு - பேச்சு

தமிழுக்குத் தொண்டாற்றிய சமயத் துறவியர், தமிழ் எங்கள் உயிருக்கு நேர், புதியதோர் உலகம் செய்வோம், யாதும் ஊரே யாவரும் கேளிர் (மேற்காட்டிய தலைப்புக்களில் நடுவர்களால் வழங்கப்படும் ஒரு தலைப்பில் 5 நிமிடங்கள் பேசவேண்டும்)

மத்திய பிரிவு - கட்டுரை

தமிழ் வளர்ச்சியில் மேற்குலகச் செல்வாக்கு, தமிழாய்வுகளுக்கு வழிகாட்டிய தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள், தமிழரும் கல்வியும், தமிழ்ப் பண்பாட்டைப் பேணுவோம் (மேற்காட்டிய தலைப்புக்களில் நடுவர்களால் வழங்கப்படும் ஒரு தலைப்பில் 250 - 300) சொற்களில் அமையுமாறு கட்டுரை வரைதல்)

மேற்பிரிவு, அதிமேற்பிரிவு - பேச்சு, கவிதை, கட்டுரை

தமிழ் மொழியும் இலக்கியமும், தமிழர் பண்பாடு, தமிழர் வாழ்வியல், தமிழரும் கல்வியும் முதலிய துறைகளைச் சார்ந்து நடுவர்களால் வழங்கப்படும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து போட்டியில் பங்கேற்க வேண்டும்.

பேச்சு - 5 நிமிடங்கள் பேசுதல் (முன்னாயத்தத்திற்காக 15 நிமிடங்கள் வழங்கப்படும்)

கட்டுரை - 350 - 400 சொற்களில் கட்டுரை வரைதல்

கவிதை - 30 - 40 அடிகளில் புதுக்கவிதையாகவோ மரபுக் கவிதையாகவோ கவிதை படைத்தல் வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.


நாளை ஆரம்பமாகின்றது

திருமறைக் கலாமன்றம்

தயாரித்து வழங்கும்

தவக்கால ஆற்றுகை

காவிய நாயகன்

(திருப்பாடுகளின் காட்சி)

காலம்: மார்ச் 21, 22, 23, 24 - 2013
(வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)
- நான்கு நாட்களுக்கு -
நேரம்: மாலை 6.45 மணி
(வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணி)
இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கு

பார்வையாளர்கள் ஆசனங்களுக்கான பதிவுகளை யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் மேற்கொள்ளலாம.
இறைமகனின் பாடுகளின் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



(C/2510)

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 2393 திருமறைக் கலாமன்றம்



சிறு விளம்பரம்

காணியுடன் வீடு விற்பனைக்குண்டு

கைதடி தெற்கு, கமநலசேவை நிலைய பின்வீதியில் 10 வீட்டுத் திட்டத்தில் உள்ள 10 ஆம் இலக்க வீடு 4 பரப்புக் காணியுடன் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கியதாக விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :- 0777110496, 0778970812

(C/2511)

# வவுனியாவில் நன்னீர் மீன்பிடியை மேம்படுத்த நீர்வள அதிகாரசபையால் பல்வேறு திட்டங்கள்

## - நீர்வள அபிவிருத்திஅதிகாரி பா. நிருபராஜ்

(வவுனியா)

வவுனியா பிரதேசத்திற்கு பல இலட்சம் ரூபா பெறுமதியில் நன்னீர் மீன்குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளதாக வவுனியா பிராந்திய நீர்வள அபிவிருத்தி அதிகாரி பாலச்சந்திரன் நிருபராஜ் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு ஏற்பட்ட வரட்சியினால் மீன்குஞ்சுகள் அழிந்தமையினாலேயே இவ்வாறு வழங்கப்பட்டதாக தெரிவித்த அவர் இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நன்னீர் மீன்பிடித்தொழிலுக்காக பொதுவாக உள்ளீடுகள் இலவசமாகவே வழங்கப்படுகின்றது. தேசிய மற்றும் தேசிய கடற்தொழில், மீன்பிடி அமைச்சின் கீழ் இயங்கும் பிராந்திய நீர்வள அபிவிருத்தி அலுவலகம் இதனை கண்காணித்து செயற்படுத்தி வருகின்றது.

இந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் 18 மீனவ அமைப்புக்கள் செயற்பட்டு வரும் நிலையில் கனகராயன்குளம், மாமடு, வவுனியா குளம், மருதமடு ஆகிய மீனவ சங்கங்கள் வரட்சியால் பெரிதும் பாதிப்படைந்திருந்தன. எனவே மார்ச் மாதமளவில் வழங்கப்பட வேண்டிய உதவிகளை கடந்த நவம்பர் மாதத்தில் வழங்கியிருந்தோம்.

இந்த வகையில் கனகராயன் குளம், மாமடு என்பவற்றுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான மீன்குஞ்சுகளும் வவுனியா குளத்திற்கு ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன் குஞ்சுகளும் வழங்கப்பட்டன. அத்துடன் வவுனியா குள மீனவ சங்கம் தாமாகவும் மீன்குஞ்சுகளை கொள்வனவு செய்திருந்தது.

இதைத் தவிர நிவாரணங்கள் என விசேடமாக எதுவும் வழங்கவில்லை. எனினும் வரட்சியால் பாதிக்கப்பட்ட நன்னீர் மீன்பிடிப்பாளர்களுக்கு நிவாரணங்களை வழங்க அமைச்சு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இத்துடன் இவ் வருடம் ஜனவரி மாதம் 1415000 மீன்குஞ்சுகளும் பெப்ரவரி மாதம் 330000 மீன் குஞ்சுகளும் மார்ச் மாதம் 15 ஆம் திகதி வரை 270000 மீன்குஞ்சுகளும் வவுனியா மாவட்டத்தில் உள்ள குளங்களுக்கு நன்னீர் மீன்பிடியை மேம்படுத்துவதற்காக வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (160)

# பட்டப்பகலில் திருட்டுமுயற்சி அச்சத்தில் கிராம மக்கள்

(கல்வயல்)

மட்டுவில் மத்தி சாவகச்சேரி பகுதியில் உள்ள வீடொன்றில் தனிமையில் இருந்த பெண்ணின் காதுத்தோட்டை திருட எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்த சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் குறித்த பகுதியிலுள்ள வீடொன்றில் பெண்ணொருவர் தனியாக இருந்துள்ளார். இதனைக் கண்ணுற்ற திருடர்கள் வீட்டிற்குள் நுழைந்து பெண்ணின் காதுத் தோட்டை பிடுங்க முயற்சிசெய்த வேளை அப்பெண்ணின் மாமியார் வந்ததையடுத்து ஆயத்தமாக நின்ற மோட்டார் சைக்கிளில் தம்பியோடியுள்ளனர்.

குறித்த பெண்ணிடம் சம்பவம் இடம்பெறுவதற்கு அரை மணி நேரத்துக்கு முன்னர் வீடுவாடகை தொடர்பாக விசாரித்துவிட்டு சென்ற நபர்களே பின்னர் இத்திருட்டில் ஈடுபட்டதாகத் தெரியவருகிறது.

எனினும் பெண்ணின் காதுத் தோட்டை பிடுங்க எடுத்த முயற்சியில் அப்பெண்ணின் காதில் காயம் ஏற்பட்டுள்ளதுடன், வாய்ப் பகுதியிலும் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் அப்பகுதியைச் சேர்ந்த திருமதி சங்கரசிவம் நிர்மலேஸ்வரி (வயது - 48) என்ற பெண்மணியே காயமடைந்தவராவார்.

குறித்த பெண்ணின் கணவர் கண்தெரியாத நிலையில் மகனுடன் வைத்தியசாலைக்குச் சென்றிருந்த வேளை அப்பெண் தனியாக இருப்பதை அவதானித்தே இத்திருட்டு முயற்சி இடம்பெற்றதாக ஊர்மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (43,இ)

# கசிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட இருவருக்கு அபராதம்

கிளிநொச்சிப் பகுதிகளில் சட்ட விரோதமாக கசிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட இருவருக்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் கிளிநொச்சி புதுமுறிப்புப் பகுதியில் அரச சாராயத்தை பொலிஸ் உத்தியோகத்தருக்கு விற்பனை செய்த நபரை பொலிஸார் கையும் மெய்யுமாக கைதுசெய்து மாவட்ட நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தினர்.

மேலும், தர்மபுரம் பகுதியில் 14 போத்தல் கசிப்பை தம்வசம் வைத்திருந்த ஒருவரை தர்மபுரம் பொலிஸார் கைதுசெய்து இருநபர்களையும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்ப்படுத்தியபோது வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி பொலிஸாருக்கு சாராயம் விற்ற நபருக்கு 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன், கசிப்பை தன்வசம் வைத்திருந்த நபருக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல அனுமதி வழங்கினார். (கே)

# கும்பாபிஷேகம்

(வரணி)

சரசாலை இலந்தைதிடல் ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மிகவும் சிறப்புற இடம்பெற்றது.

இவ்வாலயத்தின் திரிதள இராஜகோபுரம், கோபுரவாயில் மண்டபம் மற்றும் தில்லைக்காளி வடக்கு மண்டபம் என்பன புதிதாக நிர்மாணிக்கப்பட்டதை அடுத்தே கும்பாபிஷேகம் இடம்பெற்றது. (150)

# பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்க யாழ். மாவட்ட கிளையின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருப்பதால் சங்கத்தில் இதுவரை இணைந்து கொள்ளாத யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஊழியர்களை விரைவில் இணைந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட மேலதிக இணைப்பாளர் இ.பொன்னம்பலம் அறிவித்துள்ளார்.

பிரதேசங்களிலுள்ள இணைப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் அல்லது 077 8445283 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு விபரங்களைப் பெறமுடியும் என அவர் மேலும் அறிவித்துள்ளார். (11)

# வீதி நடைமுறைகளை மீறிய நபர்களுக்கு எதிராக நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வீதி ஒழுங்குகளை மீறிய நபர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திச்சென்ற ஒருவருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன் நபரின் சாரதி அனுமதிப்பத்திரத்தை 6 மாதம் வரை இரத்துச் செய்யப்பட்டது.

மேலும் பரந்தன் பகுதியில் வழி அனுமதிப்பத்திரம் இல்லாமல் சென்ற நபருக்கு வழி அனுமதிப்பத்திரம் எடுத்துவரத்தவறியதாக தெரிவித்ததையடுத்து எச்சரித்து விடுவிக்கப்பட்டார்.

மேலும் கிளிநொச்சி டிப்போ சந்திப்பகுதியில் சாரதி அனுமதிப் பத்திரமின்றி மதுபோதையில் வாகனத்தைச் செலுத்திச் சென்ற நபருக்கு 10 ஆயிரத்து 500 ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது.

மேலும் நீதிமன்றத்துக்கு முன்னால் வாகன ஒலிஎழுப்ப தடை விதிக்கப்பட்டும் ஒலி எழுப்பிய நபருக்கு 1500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மேற்படி வீதி முறைகளை மீறிச் செயற்பட்ட நபர்களை பொலிஸார் கைது செய்து கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்ப்படுத்தினர்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி குறித்த நபர்களுக்கு உரிய தீர்ப்பை வழங்கினார். (கே)

# வீட்டுத்திட்டத்திற்கான மணலைப்பெற சிரமப்படும் பொன்நகர் மக்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொன்நகர் பகுதியில் வீட்டுத்திட்ட பயனாளிகள் தமக்குத் தேவையான மணலைப் பெறுவதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இம்மாவட்டத்தில் உள்ள குறித்த பிரதேசத்தில் இந்திய வீட்டுத்திட்டம், அரச சார்பற்ற நிறுவனங்களின் வீட்டுத்திட்டம் என்பன மக்களால் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில், வீடு கட்டுவதற்கான மணலைப் பெறுவதில் தாம் கஷ்டங்களுக்குள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக வீட்டுத்திட்ட பயனாளிகள் உரிய அனுமதி பெற்று மணலை ஏற்றிக்கொண்டு வரும் போது இடையில் பொலிஸார் மறித்து நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லும் நடவடிக்கைகளால் தாம் கஷ்டப்படுவதாகவும், இதற்கு வழி அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமையே காரணம் எனவும் பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

யுத்த அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து தற்போது மீள்குடியேறி வீட்டுத்திட்டங்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும், அவற்றை உரிய வகையில் கட்டுவதற்கு தாம் பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டிய நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கும் பயனாளிகள் தமக்கு மணல் ஏற்றுவதற்கு வழி அனுமதிப்பத்திரம் வழங்கினால் தாம் சிரமமின்றி வீட்டுத்திட்டப் பணிகளை முன்னெடுக்க முடியும் என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். (கே)



காரைநகர் மணிவாசகர் சபையால் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சமய அறிவுப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு ஆலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. அதில் மாணவர்களுக்கான பரிசில்களை யாழ்ரன் கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி, யாழ்.பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் வீரமங்கை ஆகியோர் வழங்கி வைப்பதனையும், பாடசாலை மாணவர்களின் பஜனை நிகழ்ச்சியையும் காணலாம். (50)

மனிதனை மனிதனாக்குபவை உதவிகளும் வசதிகளுமல்ல. இடையூறுகளும் துன்பங்களுமே. - மாத்யூஸ்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## இன்று குருவி, நாளை நாம்!

"காக்கை குருவி எங்கள் ஜாதி' என்றவன் எங்கள் பாட்டன். அதாவது, "சக மனிதனை நேசிப்பதைப் போல இதர உயிர்களையும் நேசி' என்று இதற்குப் பொருள். நாங்கள்தான் சகமனிதர்களையே நேசிப்பதில்லையே, பாவம் பாரதி!

ஒவ்வோராண்டும் மார்ச் 20 ஆம் திகதி உலக சிட்டுக்குருவிகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. எதற்கென்றால், குருவியை அழிக்கும் சுற்றுச்சூழல் கேட்டைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற எண்ணம் நமக்கும் – நமது குழந்தைகளுக்கும் வர வேண்டும் என்பதற்காக.

மனித உயிர்களையே கணக்கிலெடுக்காமல் வளர்ந்து கொண்டிருக்கிறோம், சிட்டுக்குருவிகளையா பொருட்படுத்துவோம்? சிட்டுக்குருவியை, வண்ணத்துப் பூச்சியை, மைனாக் குஞ்சையெல்லாம் நின்று கவனிக்க நேரமிருக்கிறதா நமக்கு? நமது அவசரத்திலும் பேராசைகளிலும் முன்னே முன்னே என்று தாவும் முன்னேற்றப் பாய்ச்சலிலும் நாமிருக்கிறோம்.

இன்று நடுத்தர வயதைக் கடந்தவர்கள் சிறுவயதில் பார்த்து பரவசப்பட்ட ஒரு பறவையினம்தான் சிட்டுக் குருவி. "விட்டு விடுதலையாகி நிற்போம் சிட்டுக்குருவியைப் போல" என்று பாரதி அதை விடுதலைக்குக் குறியீடாக்கியிருக்கிறான். அதன் தானிய மணி போன்ற குறுணிக் கண்கள், வெடுக் வெடுக்கென தலையைத் திருப்பம் அழகு, தத்துவதும் இடம் மாறி அமர்வதுமான கவர்ச்சிகளையெல்லாம் ரசித்துப் பாட்டாக்கியிருக்கிறான்.

நமது வீடுகளுக்குள் கூடு கட்டி வாழ்ந்த குருவிகளை இப்போது நாம் பார்க்க முடிவதில்லை. "கீச் கீச்' என்று கத்திக் கொண்டு தானியங்களைக் கொத்தித் தின்று கொண்டு, சட்டென்று சிறகடிக்கும் அழகைக் காண முடிவதில்லை. காரணம், சுற்றுச் சூழல் கேடுதான்.

சிட்டுக்குருவிகள் குறைந்துவருவதைக் கண்டுபிடித்து முதலில் இங்கிலாந்தில்தான் கணக்கெடுக்க ஆரம்பித்தார்கள். 1920–க்குப் பின்னர் சிட்டுகுருவிகளின் எண்ணிக்கை நகரப்பகுதிகளில் முன்பு இருந்ததைவிட சுமார் 90 சதவீதம் வீழ்ச்சியடைந்து விட்டதாக இந்த ஆராய்ச்சியின் வாயிலாகத் தெரியவந்தது. அதாவது குதிரைவண்டிகளில் கொண்டுசெல்லப்படும் மூட்டைகளிலிருந்து சிந்தும் தானியங்களையும், குதிரைகளின் கழிவுகளிலுள்ள செரிக்கப்படாத தானியங்களையும் உட்கொண்டு வாழ்ந்து வந்த சிட்டுக்குருவிகள் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை உயரத்தொடங்கிய பின் குறைய ஆரம்பித்தன.

குருவிகள் அழிவுக்கு ஈயமில்லாத பெட்ரோல், செல்போன் உபயோகமும் முக்கிய காரணம். வாகனங்களுக்கு பயன்படுத்தும் "அன்லீடட்" பெட்ரோலில் உள்ள இரசாயனப் பொருட்கள், பறவைகளுக்கு உணவாகக்கூடிய முக்கியமான பூச்சிகளை கொன்று விடுகின்றன. இதேபோல் செல்போனில் இருந்து வெளியேறும் மின்காந்த அலைகள் குருவிகளின் இதயத்துடிப்பில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

சின்னச் சிட்டுக்குருவி அழிந்து வருவதற்கு நாம் இவ்வளவு கவலைப்பட வேண்டுமா? வேண்டும். சிட்டுக்குருவிகள் நம் வாழ்வுக்கு ஆதாரமானவை. காடுகளில் வாழும் பறவைகள், விலங்குகள் சுற்றுச்சூழலுக்கு எவ்வளவு முக்கியமோ அதுபோல் பெரும்பாலும் நகர்ப்புற வாசிகளாகிவிட்ட நமக்கு, நாம் வாழும் சுற்றுச்சூழலின் தரத்தை அறிந்து கொள்ளும் அளவுகோல், சமூகப் பறவையான சிட்டுக்குருவிகளே.

இமயமலையில் 14 ஆயிரம் அடி உயரத்திலும், பூமிக்கு அடியில் 2 ஆயிரம் அடி ஆழத்தில் உள்ள நிலக்கரிச் சுரங்கத்திலும் வாழும் தகுதி கொண்டவை சிட்டுக்குருவிகள். நாம் சுவாசிக்கும் அதே காற்றைத்தான் சுவாசிக்கின்றன. எங்கும் பறந்து திரியும் இந்தப் பறவைகளுக்கு அழிவு என்பது சுற்றுச்சூழலின் மோசமான பாதிப்பு ஏற்பட்டிருப்பதற்கான எச்சரிக்கை மணி என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இப்படியே நாம் சுற்றுச் சூழலை கெடுத்துக் கொண்டேயிருந்தோம் என்றால், இன்று குருவி? நாளை... நாம்.

- ஆசிரியர்

# பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை

# குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் கைது

(சுன்னாகம்)

சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு கடந்த வாரம் புதிதாக நியமனம் பெற்று வந்த பொலிஸ் பொறுப்பதிகாரி துஷந்த மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையினால் அப்பிரதேசத்தில் இடம்பெற்ற குற்றச்செயல்களுடன் தொடர்புடைய பலர் கைது செய்யப்பட்டு சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்துக் உடனடியாக செயற்பட்ட பொலிஸார் உடுவில் மல்வம் பகுதியில் நான்காயிரத்து அறுநூறு மில்லி கிராம் கஞ்சா போதைப்பொருளைக் கைப்பற்றியதுடன் அது தொடர்பாக இரண்டு சந்தேக நபர்களைக் கைதுசெய்தனர்.

அவர்களை நீதிபதியின் வாசஸ்தலத்தில் ஆஜர்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மேலும், வீதி ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் உடுவில் அம்பலவாணர் வீதி பகுதியில் சென்ற ஒருவரிடம் சந்தேகம்கொண்டு அவரின் கையடக்கத் தொலைபேசியைப் பரிசோதித்தபோது அதில் ஆபாசப் படங்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது இதனையடுத்து அவரைக் கைதுசெய்து நிதவான் முன்பு ஆஜர்படுத்தியபோது அவரைப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி எதிர்வரும் 28 ஆம் திகதி நிதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, குப்பிளான் மைலன்காடு பிரதேசத்தில் சட்டவிரோதமாக சாராயம் வைத்திருந்த ஒருவரைக் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்தினர். அவரை விசாரணை செய்த நீதிபதி 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

இவற்றினைவிட மதுபானம் அருந்திவிட்டு விபத்தினை ஏற்படுத்தும் வகையில் வாகனம் செலுத்தி சென்ற ஒன்பதுபேர் திடீர் வீதிப் பரிசோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டனர். அவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொலிஸாரின் திடீர் வீதிச் சோதனைகள் தற்போது அதிகரித்துள்ளமையானது விபத்து மற்றும் குற்றச் செயல்களைத் தடுக்க உதவும் என பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (54)

# இலங்கைப் பணிப்பெண்களின் அவலம்; சவுதியில் கம்பிகளை ஏற்றி துன்புறுத்தல்

சவூதி அரேபியாவில் பணிபுரிந்த இலங்கைப் பணிப்பெண் ஒருவரின் உடலில் ஊசி போன்ற கம்பிகளை ஏற்றி துன்புறுத்திய சம்பவம் தொடர்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நஷ்டஈடு பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக பிரதிப் பொதுமுகாமையாளர் மங்கல ரந்தெனிய கூறினார்.

பாதிக்கப்பட்ட பெண் கடந்த வாரம் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதோடு அவர் குருநாகல் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது. மகவ பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதான மேற்படி பெண் கடந்த ஜனவரி மாதம் இவ்வாறு ஊசி ஏற்றி கொடுமைப்படுத்தப்பட்டுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இவரது கையிலும் காலிலும் 4 ஊசிகள் ஏற்றப்பட்டுள்ளன. இது குறித்து இலங்கை முகவரினூடாக தங்களுக்கு அறிவிக்கப்பட்டதாகவும் அது குறித்து விசாரணை நடத்துகையிலே குறித்த பெண் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதிப் பொதுமுகாமையாளர் கூறினார்.

குறித்த பெண்ணை ஆஸ்பத்திரியில் அனுமதித்து ஊசிகளை அகற்றியுள்ள வீட்டு உரிமையாளரும் மனைவியும் பின்னர் அவரை தமது செலவில் இலங்கைக்கு திருப்பி அனுப்பியுள்ளனர். அவர்கள் இருவரும் மருத்துவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

இலங்கை முகவர் ஊடாக பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நஷ்டஈடு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துவருவதாகவும் அவர கூறினார்.

# பனம் பொருட்களுக்கு புதிய சந்தைவாய்ப்பு

யாழ்.மாவட்டத்திலுள்ள சுற்றுலா விடுதிகளில் பனைசார் உணவுப் பொருட்கள் மற்றும் கைப்பணிப் பொருட்களை சுற்றுலாப் பயணிகளிடத்தில் விற்பனை செய்வதற்குரிய நடவடிக்கைகளை பனை அபிவிருத்தி சபையினர் மேற்கொண்டுள்ளதாக பனை அபிவிருத்தி சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்துள்ளார்.

பனை அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் சுற்றுலா விடுதிகளை வைத்திருக்கும் உரிமையாளர்களுடனான கலந்துரையாடலொன்று அண்மையில் நடைபெற்றது. இதில் 30 இற்கும் மேற்பட்ட விடுதி உரிமையாளர்கள் கலந்துகொண்டனர்.

பனையிலிருந்து பெறப்படும் பனங்கட்டி, பனாட்டு, புளுக்கொடியல், ஒடியல்மா, பனங்களி, பனஞ்சாறு, போன்ற உணவுப் பொருட்களும் பனையோலைசார் அலகுறு கைவினைப் பொருட்கள் போன்றவற்றை சுற்றுலா விடுதிகளில் வைத்து விற்பனை செய்வதற்கு சுற்றுலா விடுதி உரிமையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

நாடுபூராகவும் உள்ள தனியார் வர்த்தக நிலையங்களில் போலியான பனங்கட்டி விற்பனைகளை வரவிடாமல் தடுப்பதற்கு எமது சபையினால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட பனங்கட்டிகளை இந்நிறுவனங்களினூடாக விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அவை வெற்றியளித்து இருக்கிறது. இதனால் பனங்கட்டிக்கான சந்தைவாய்ப்பு அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும் சுமார் 123 தனியார் வர்த்தக நிலையங்களில் பனம் உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## பஸ் குடைசாய்ந்து விபத்து; 30 பேர் வைத்தியசாலையில்

ப்லாங்கொடை, மாதாள பிரதேசத்தில் பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி குடைசாய்ந்ததில் 30 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை 10 மணியளவில் இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் விபத்துக்குள்ளான பஸ்ஸில் 83 பயணிகள் பயணித்துள்ளதாகவும் பஸ் அதிவேகமாக பயணித்தமையே விபத்து ஏற்பட காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டது. சப்ரகமுவ பல்கலைக் கழகம் என எழுதப்பட்டிருந்த பஸ்ஸே இவ்வாறு விபத்திற்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தபால் சேவை வழமைக்கு

ஸ்தம்பிதமடைந்திருந்த வெளிநாட்டு தபால்சேவை காரணமாக தேங்கிக்கிடந்த தபால்பொதிகள் உரிய நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தபால் சேவைகள் திணைக்களம தெரிவித்துள்ளது. வெளிநாடுகளுக்கு தபால் பொதிகளை அனுப்பி வைப்பது தொடர்பில் தனியார் நிறுவனம் ஒன்றிடம் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. குறித்த நிறுவனத்திடம் வழங்கப்பட்டிருந்த தபால் பொதிகள் சில இடங்களில் விநியோகிக்கப்படாமல் ஸ்தம்பிதமடைந்திருந்ததாக தபால் மா அதிபர் ரோஹன அபேரத்ன கூறினார்.

# கொம்பனித்தெருவில் கொள்ளை

கொம்பனித்தெருவில் வர்த்தகர் ஒருவரிடம் கொள்ளையிடப்பட்ட பணத்தில் 5 இலட்சம் ரூபாவை கோட்டை பொலிஸ் நிலையத்தின் முன்னாள் வாகன போக்குவரத்து நிலையப் பொறுப்பதிகாரியிடம் இருந்து கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர். கொள்ளையர்களுக்கு இடையில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களின் போது இவருக்கு ஐந்து இலட்சம்ரூபா கிடைக்கப்பெற்றதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கோட்டை பொலிஸ் நிலையத்தின் முன்னாள் வாகன போக்குவரத்து தொடர்பிலான நிலையப் பொறுப்பதிகாரி உட்பட மேலும் சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வெள்ளவத்தையைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் அண்மையில் தனியார் வங்கியொன்றில் வெளிநாட்டு நாணயங்களை மாற்றிக்கொண்டு திரும்புகையில் அவரிடமிருந்த 100 இலட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டது. இந்தக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரண்டு சந்தேகநபர்கள் தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்

## 29

கடற்சண்டைகளின் போது கடற்புலிகளின் விசேட தளபதி கேணல் சூசை கரையில் இருந்த வாறு உத்தரவுகளை வழங்கிக் கொண்டிருக்க மங்களேஷ், விநாயகம், சலீம் போன்ற துணைத் தளபதிகள் படகுகளில் இருந்த வாறு கொமாண்டிங் செய்து கொண்டு தாக்குதல் அணிகளை வழிப்படுத்திக் கொண்டிருப்பார்கள். இவ்வாறு தாக்குதலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற பொழுது, எதிர்பார்த்த இலக்குகள் சரியாக வரும் சமயம், கடற்புலிகளின் கரும்புலிகள் அணியினரை கேணல் சூசை கரையில் இருந்தவாறு வழியனுப்பி வைப்பார். அவர்கள் போய் கடற்படைப் படகுகளுடன் முட்டிமோதுகின்ற பொழுது பெரும் அதிர்வுடன் குறித்த கடற்படைப் படகுகள் வெடித்துச் சிதறுவதுடன் குறித்த கரும்புலிகளும் வெடித்துச் சிதறுவார்கள்.

கடற்புலிகளின் கரும்புலிகள் அணிக்குரிய பொறுப்பு கடற்புலிகளின் தளபதியாகிய சூசையிடம் ஒப்படைக்கப்பட்ட போதிலும் ஒட்டுமொத்த கரும்புலிகளினுடைய நடவடிக்கைகளை பிரபாகரனே நேரடியாக கையாண்டு வந்தார். கடற்புலிகளின் கரும்புலிகள் அணி முழுப் பொறுப்பையும் தன்னிடம் ஒப்படைக்குமாறு சூசை கோரிக்கை விடுத்தபோதிலும் பிரபாகரன், கரும்புலிகளிற்கென பல விசேட சலுகைகளை வழங்கியவாறு அவர்களை முழுமையாக மேற்பார்வை செய்வதும் அவர்களுக்குரிய விசேட சலுகைகளை கையாளுவதும் தனது நேரடி நிர்வாகத்தின் கீழ் இருக்குமாறு பார்த்துக்கொண்டார்.

தரைப்படை கரும்புலிகள், வான் கரும்புலிகள், கடற்கரும்புலிகள் ஆகியவற்றின் நிர்வாகத்தை வேறுவேறாக ஒழுங்குபடுத்திய புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒவ்வொரு துறையினரும் தங்களுக்குரிய தாக்குதல் இலக்குகள் தொடர்பில் தலைவரிற்கும் பொட்டம்மானிற்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தெளிவு படுத்துதலைக் கட்டாயமாக்கினார்.

தாக்குதல்களுக்கு செல்வதற்கு முன்னர் தாக்குதலில் ஈடுபடப் போகின்ற கரும்புலிகளுடன் பிரபாகரன் குறைந்தது 6 மணி நேரமாவது தனது நேரத்தைச் செலவிடுவார். இவ்வாறு தாக்குதலிற்கு செல்பவர்களிற்கு விசேட உணவுகள் வழங்கப்படுவதுடன் தலைவருடன் இணைந்து நின்று புகைப்படம் எடுப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும். இவ்வாறு புகைப்படம் எடுத்து தாக்குதலிற்கு செல்பவர்கள் சில வேளைகளில் தங்களது இலக்குகளை அடையாமல் திரும்பி வருகின்ற நிலைமைகள் ஏற்பட்டால் அவ்வாறு வருபவர்களுக்கு ஆரம்பத்தில் விசாரணைகள் கடுமையானதாக இருந்தது. இருந்த போதிலும் காலப்போக்கில் களநிலவரங்களுக்கு ஏற்பவே தாக்குதல்களை நடத்த முடியுமென தாக்குதல்களிற்கு தலைமை தாங்குகின்ற தளபதிகள் விளக்கிக் கூறியதை அடுத்து களநிலவரத்திற்கேற்ப தாக்குதல்களை நடத்துவதற்குரிய சந்தர்ப்பம் கரும்புலிகளிற்கு வழங்கப்பட்டது. அதாவது இலக்குச் சரியாக நெருங்கி வருகின்ற பொழுதே தாக்குதல்களை நடத்த வேண்டுமென பிரபாகரன் கரும்புலிகளிற்கு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இதனை அடுத்து கடற் சண்டையாக இருந்தாலும் சரி, தரைச் சண்டையாக இருந்தாலும் சரி தாக்குதல்கள் இடம்பெறுகின்ற பொழுது அந்த தாக்குதலின் சாதக பாதகங்களை கணக்கில் எடுத்தே கரும்புலிகள் களத்தில் இறக்கப்படுவார்கள். வழமையான கடற்சண்டைகளின் போது கடற்புலிகளின் விசேட தளபதி கேணல் சூசை கரையில் இருந்தவாறு உத்தரவுகளை வழங்கிக்கொண்டிருக்க மங்களேஷ், விநாயகம், சலீம் போன்ற துணைத்தளபதிகள் படகுகளில் இருந்தவாறு கொமாண்டிங் செய்து கொண்டு தாக்குதல் அணிகளை வழிப்படுத்திக் கொண்டிருப்பார்கள். இவ்வாறு தாக்குதல் அணிகள் தாக்குதலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற பொழுது, எதிர்பார்த்த இலக்குகள் சரியாகவரும் சமயம், கடற்புலிகளின் கரும்புலிகள் அணியினரை கேணல் சூசை கரையில் இருந்தவாறு வழியனுப்பி வைப்பார். அவர்கள் போய் கடற்படைப் படகுகளுடன் முட்டிமோதுகின்ற பொழுது பெரும் அதிர்வுடன் குறித்த கடற்படைப் படகுகள் வெடித்துச் சிதறுவதுடன் குறித்த கரும்புலிகளும் வெடித்துச் சிதறுவார்கள். இவ்வாறு வெடித்துச் சிதறுவதன் மூலம் அந்தச் சண்டையில் கடற்புலிகளால் வெற்றி பெற முடிந்திருந்தது. இருந்தபோதிலும் பின்னய நாட்களில் இலங்கை கடற்படையினர் கடற்புலிகளின் இந்தப் போர் நுட்பத்தை சரியாக மதிப்பீடு செய்து அதற்கு ஏற்ப தமது வியூகங்களை வகுக்கத் தொடங்கினர். கடற்படையினரும் பதில் போரியல் தந்திரங்களை மதிநுட்பத்துடன் கடைப்பிடிக்கத் தொடங்கியதால் பின்னய நாட்களில் கடற்சண்டைகள் புலிகளுக்கு பெரியளவில் சாதகமான சூழலைத் தோற்றுவிக்கவில்லை.

போரியல் ரீதியில் சாதனைகள் ஏற்படாத சூழ்நிலை தோன்றியதை அடுத்து கடற்புலிகள் அடுத்த கட்டம் தொடர்பில் சிந்திக்கத் தொடங்கினர். அதாவது கடலில் சண்டை இடம் பெற்றுக் கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் கரையில் இருந்து ஆட்லறி போன்ற பெரியளவிலான மோட்டார் தாக்குதல்களை கடற்படை இலக்குகள் மீது நடத்தலாமா என்பது பற்றி

■ வே.அர்ச்சுணன்

கடற்புலிகள் ஆராய்ந்த போதிலும் கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை தனது தளபதிகள் கூறிய குறித்த ஆலோசனையை நிராகரித்ததுடன், தரையில் தாக்குதல் நடக்கின்ற பொழுதுஅது சரியாக இருக்கும். ஆனால் கடல் பகுதியின் பரந்த பிரதேசத்தில் சண்டைகள் இடம்பெறுகின்ற பொழுது பல சந்தர்ப்பங்களில் இலக்குகள் பிழையாகவே இருக்கும். சிலவேளைகளில் தரையில் இருந்து ஏவுகின்ற எறிகணை எங்கள் அணியினர் மீதும் விழுந்துவிடலாம். எனவே கடற்கரும்புலிகள் அணியினரே எமது பிரதான உயிர் ஆயுதமாக இருப்பார்கள். இலங்கைப் படையினர் எமது போரியல் தந்திரோபாயங்களை தெரிந்து வைத்திருப்பதால் நாங்கள் மாற்று வழிகளில் அவர்கள் மீது தாக்குதல்களை நடத்தலாம். இதைவிட எங்களது படகுகளில் மோட்டார் குண்டுகளை எடுத்துச் சென்று தாக்குதல்களை நடத்தலாம். இவ்வாறு நடத்துகின்ற பொழுது அந்தக் களமுனை எங்களுக்குச் சாதகமாக இருக்கும் என தளபதிகளுக்கு விளக்கம் கொடுத்த சூசை கடற்புலிகளின் அணியினருக்கு தேவையான ஆயுதங்கள் தொடர்பான பட்டியல் ஒன்றை தலைவர் பிரபாகரனிடம் ஒப்படைத்து குறித்த ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்குரிய அனுமதியையும் பிரபாகரனிடம் கோரியிருந்தார். இதற்கு உடனடியாகவே அனுமதி அளித்த பிரபாகரன் நீங்களே இந்த ஆயுதங்களை கொள்வனவு செய்து கொள்ளுங்கள் என சூசையிடம் பிரபாகரன் தெரிவித்தார்.

ஆனாலும், முகமாலையில் அரச படையினர்மீது புலிகள் தாக்குதலை ஆரம்பித்து முள்ளிவாய்க்காலில் யுத்தம் முடியும் வரைக்கும் கடற்புலிகள் கோரிய ஆயுதங்கள் அல்லது கடற்புலிகள் விரும்பிய ஆயுதங்கள் எவையுமே இறுதி வரைக்கும் வந்துசேரவே இல்லை. யுத்தத்தின் பின்னடைவிற்கும் முள்ளிவாய்க்கால் முடிவுகளிற்கும், ஆயுத விநியோகமும் ஒரு பிரதான காரணியாக இருந்து வருகிறது. புலிகள் ஆயுத வழங்கல், ஆளணி வளங்கள் உட்பட பல்வேறு நெருக்கடிகளை சந்தித்துக் கொண்டிருந்த பொழுது தமிழ் ஊடகங்கள் புலிகள் நவீன ஆயுதங்களை வைத்திருக்கிறார்கள் எனவும் தலைவரிடம் பாரிய திட்டம் இருக்கிறது. நன்றாக கிட்ட வரவிட்டு வருகின்ற படையினருக்கு முடிவு கட்டுவார் எனவும் தமது பத்தி எழுத்துக்களில் எழுதத் தொடங்கியதுடன் பல ஆய்வுகளையும் வெளியிட்டு வந்தனர். இது போரியல் ரீதியில் படைத்தரப்பிற்கு உளவியல் ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தினாலும் நடைமுறையில் இது புலிகளுக்கு வெற்றிக் கனிகளை குவிக்கவில்லை. ஏனெனில் அரச படைத்துறை போரியல் நுணுக்கங்கள் தொடர்பில் சரியான பட்டறிவை பெற்றதுடன் புலிகள் அமைப்பிலிருந்து விலகிச் சென்றவர்கள் புலிகளிடம் இருந்து பிரிந்தவர்கள் உட்பட பலர் புலிகள் தொடர்பிலான துல்லியமான தகவல்களை அரச படையினரிற்கு வழங்கியிருந்தனர்.

இவ்வாறு துல்லியமான தகவல்களையும், தரவுகளையும் வைத்துக்கொண்டே அரச படைத்தரப்பு இறுதிக் கட்ட யுத்தத்தில் குதித்தது. ஆனால் விடுதலைப் புலிகள் அரச படைத்துறையினர் மீது சாதாரண மதிப்பீடுகளை வைத்துக்கொண்டே களத்தில் குதித்தனர். இதற்குப் பிரதான காரணம் தமிழ் ஊடகங்கள் விடுதலைப் புலிகளை பலமாக இருப்பது போன்றும் படைத்தரப்பு பலவீனத்துடன் இருப்பது போன்றும் தங்களது உசாரேற்றும் பத்திகளில் காட்டி எழுதிக்கொண்டிருந்ததாகும். இந்த நிலைமை விடுதலைப் புலிகளிற்கு பாதகமாகவே அமைந்தது. அதாவது நான் இந்தக் கட்டுரைத் தொடரிலே ஆரம்பத்திலே குறிப்பிட்டு வருவதைப் போன்று படையினர் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தபொழுது விடுதலைப் புலிகள் அசண்டையீனமாக இருந்துவிட்டனர். இதற்குப் பிரதான காரணம் ஊடகங்களின் செயற்பாடே ஆகும். ஏற்கனவே புலிகளின்குரல் போன்ற ஊடகங்களைப் பார்த்த நாம் தொடர்ந்தும் ஏனைய ஊடகங்கள் விடுதலைப்புலிகளை அழித்தனவா? அல்லது வளர்த்தனவா? என்பதனைப் பார்ப்போம்.

(தொடரும்)

# நாட்டையும் மக்களையும் நரகத்திற்கு இட்டுச் செல்ல அரசு முயற்சி



(கொழும்பு) நாட்டையும் மக்களையும் நரகத்திற்கு இட்டுச் செல்ல அரசாங்கம் முயற்சிப்பதாகவும், அதற்கு அனுமதியளிக்க முடியாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியான அழுத்தங்களை எதிர்த்து உள்நாட்டில் போராட்டம் செய்வதில் அர்த்தமில்லை.

உண்மையில் இந்த நாட்டையும், மக்களையும் சர்வதேசத்தில் காட்டிக் கொடுத்த இந்த அரசாங்கத்திற்கு எதிராகவே மக்கள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்த வேண்டும்.

நாட்டின் பாவ காரியங்கள் சர்வதேசத்திற்கு சொல்லுவதற்கில்லை, எனினும் இந்த அரசாங்கத்தின் பாவ காரியங்கள் பற்றி பட்டியலிட்டுக் கூற முடியும்.

அரசாங்கத்தின் பிழைகளினால் நாட்டு மக்களே பாதிக்கப்படுவார்கள். 2009 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றில் விசேட உரையாற்றவுள்ளார்.

ஹலால் சர்ச்சை மற்றும் முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கி வரும் ஏனைய பிரச்சினைகள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையின் அடிப்படையில் இந்த உரை அமையும்.

கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டிருந்தது. முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கி வரும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார்.

## வத்தளைப் பகுதியில் ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

வத்தளை பொலிஸ் பிரிவின் திம்பிரிகஸ்யாய குறுக்கு வீதியில் 712 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு மாவட்ட குற்றத் தடுப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இரத்தினபுரியில் கஞ்சா வைத்திருந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

•சந்தேகநபர்களிடமிருந்து 2.6 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப் பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# இடி, மின்னல் குறித்து எச்சரிக்கை வருட ஆரம்பத்தில் மூவர் உயிரிழப்பு

(கொழும்பு)

இடைப் பருவப் பெயர்ச்சி மழைக்கால நிலை ஆரம்பமாகியுள்ளதால் இடி, மின்னல் தாக்கங்களிலிருந்து தவிர்த்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் விசேடகவனம் செலுத்த வேண்டுமென வளிமண்டலவியல் திணைக்களத்தின் கடமை நேர வானிலையாளர் போதினி கருணாபால நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இவ்வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நேற்று முன்தினம் 18 ஆம் திகதி வரையும் இடி, மின்னல் தாக்கம் காரணமாக மூவர் உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் ஒருவர் இடைப் பருவப்பெயர்ச்சி மழைக் கால நிலை ஆரம்பமான பின்னர் உயிரிழந்ததாகவும் அவர் கூறினார்.

இடைப் பருவப் பெயர்ச்சி மழைக் காலநிலையின் போது இடி, மின்னலின் தாக்கம் தீவிரமாகக் காணப்படும். குறிப்பாக மார்ச் மாதத்தின் நடுப் பகுதி முதல் மே மாதத்தின் முற்பகுதி வரையும் இந்நிலைமை காணப்படும் எனவும் அவர் கூறினார்.

இடி, மின்னல் தாக்கம் காரணமாக கடந்த வருடம் 48 பேர் உயிரிழந்தமை தெரிந்ததே.

ஆகவே இடி, மின்னலுடன் மழை பெய்யும் போது திறந்த வெளிகளில் நடமாடுவதையும், நீராடுவதையும், விளையாடுவதையும், பச்சை மரங்களுக்குக் கீழே இருப்பதையும், வீடுகளில் மின்சாரப் பொருட்களைப் பாவிப்பதையும், வேலைகளில் ஈடுபடுவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# மகிந்த யுத்தக் குற்றவாளி கோரிக்கையை ஏற்க முடியாது

பா.ஜ.க. தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை யுத்தக் குற்றவாளி என்று அறிவிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை தாங்கள் ஆதரிக்கவில்லை எனவும் பாரதிய ஜனதாக் கட்சி தெரிவித்துள்ளது. அதன் பேச்சாளர் ரவிசங்கர் பிரசாத் இதனைத் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் கருத்து வெளியிடும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழர்களுக்கு பாதுகாப்பும், சமஉரிமையும் வழங்கப்பட வேண்டும். அத்துடன் தொடர்ந்தும் வன்முறைகள் இடம்பெற இடமளிக்கக்கூடாது என்பதுடன், இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியா சரியான நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும்.

எனினும் மகிந்த ராஜபக்ஷவை யுத்தக்குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் என்ற, தமிழகக் கட்சிகளின் கோரிக்கையை பி.ஜே.பி ஏற்றுக்கொள்ளாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மோசடிகள் மற்றும் புலனறிவு சுட்டெண் இலங்கை 79 ஆவது இடத்தில்




(கொழும்பு)

சர்வதேச மோசடிகள் மற்றும் புலனறிவு சுட்டெண்ணுக்கு அமைய இலங்கை 79 ஆவது இடத்தினை பெற்றுள்ளது. கடந்த வருட அறிக்கையுடன் ஒப்பிடுகையில் இலங்கை ஏழு இடங்கள் முன்னேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருட அறிக்கையின் படி சர்வதேச மோசடிகள் மற்றும் புலனறிவு சுட்டெண்ணுக்கு அமைய இலங்கை 86 ஆவது இடத்தில் இருந்தது.

சர்வதேச மோசடிகள் மற்றும் புலனறிவு சுடடெண்ணுக்கு அமைய இந்தியா மற்றும் பாகிஸ்தான் போனற நாடுகளை விடவும் இலங்கை முன்னிலை பெற்றுள்ளது. குறித்த அறிக்கையின் படி இந்தியா 94 ஆவது இடத்தினையும் பாகிஸ்தான் 139 ஆவது இடத்தினையும் பெறறுக் கொண்டுள்ளன.

சர்வதேச மோசடிகள் மற்றும் புலனறிவு சுட்டெண்ணுக்கு அமைய மோசடிகள் குறைந்த நாடாக டென்மார்க் முதலிடத்திலும், நியுசிலாந்து, பின்லாந்து ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களையும் பிடித்துள்ளன.

இந்த அறிக்கையின் படி மோசடிகள் அதிகளவில் இடம் பெறும் நாடாக 174 ஆவது இடத்தில் சோமாலியா உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தூக்கில் தொங்கிய பெண் பொலிஸார் விரிவான விசாரணை

(கொழும்பு)

பொகவந்தலாவ - டியன்சின் தோட்டத்தில் 50 வயது பெண் ஒருவர் தனிமையில் இருந்தவேளை தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

பரஞ்சோதி என அறியப்படும் நான்கு பிள்ளைகளின் தாயார் இவ்வாறு தற்கொலை செய்து கொண்டதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நடந்த இடத்திற்கு வந்த மரண விசாரணை அதிகாரி மரணத்தில் சந்தேகம் இருப்பதாக தெரிவித்தார். ஆகையால் பொகவந்தலாவ பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெளிநாட்டு ஆசையில் 17 இலட்சத்தை இழந்தார்

வெளிநாட்டுப் பயணத்திற்கு இரண்டு விசாக்களை பெற்றுத் தருவதாகக் கூறி 17 இலட்சம் ரூபா பணமோசடியில் ஈடுபட்ட ஒருவர் தொடர்பான விசாரணைகளை சிலாபம் குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். சந்தேகநபர் கடந்த 2012ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம்திகதி தொடக்கம் டிசம்பர் 20ஆம் திகதி வரை 17 இலட்சம் ரூபா **மோசடி** செய்ததாக மாரவில பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். தன்னிடம் பணமோசடி செய்தவரது சரியான பெயர், முகவரி தெரியாது என முறைப்பாடு செய்தவர் தெரிவித்துள்ளார்.

# தூதரக பணியாளர்கள் மூவர் மாயம்

(கொழும்பு)

இத்தாலிக்கான இலங்கைத் தூதுவர் அசித்த பெரேராவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பணியாற்றி வந்த மூன்று இலங்கையர்கள் காணாமல் போயுளளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் தூதுவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். தூதுவரை நாடு திரும்புமாறு உத்தரவிடப்பட்டிருந்த நிலையில் அவர் அதற்கு தயாராகும் காலப்பகுதியில் அவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

பெருந்தொகையான பணத்தையும் அவர்கள் எடுத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாலி தூதுவருக்கு எதிராக மோசடி குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு அண்மையில் அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்ட நிலையில் அவர் அங்கிருந்து மீளழைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்துக்கு பயணத்தடை தொடர்பில் ஆராய்வு

(கொழும்பு)

தமிழ் நாட்டுக்கான பயணத் தடையை விதிப்பது தொடர்பில் இலங்கை அரசாங்கம் ஆலோசித்து வருகிறதுவெளியுறவுத் துறை அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகமவை மேற்கோள்காட்டி ஆங்கில ஊடகம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

தமிழ் உணர்வாளர்களின் மோசமான இந்தச் செயற்பாட்டினால், இலங்கையர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் தமிழகத்திற்கான பயணத்தடையை விதிப்பது தொடர்பில் அரசாங்கம் ஆலோசனை நடத்துகிறது.

ஏற்கனவே கடந்த வருடம் இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்ற நிலையில், தமிழகத்திற்கான பயணத்தடைகள் விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழகம் செல்வோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும் - ஆறுமுகன் தொண்டமான் தமிழகத்திற்கு செல்பவர்களின் பாதுகாப்பினை இரண்டு நாட்டின் அரசாங்கங்களும் உறுதிப்படுத்த வேண்டும் என்று அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் வலியுறுத்தியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் இந்திய மற்றும் தமிழக அரசாங்கங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்திற்குச் செல்கின்ற பெரும்பான்மை இலங்கையர்கள் தொடர்ச்சியாக தாக்குதலுக்கு உட்படுத்தப்படுகின்றார். இது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவில் பாதிபபை ஏற்படுத்தும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# வடமராட்சி கிழக்கின் அபிவிருத்தியில் அமைச்சர் டக்ளஸின் பங்கு அளப்பரியது

## - பங்குத்தந்தை ஜேசுரட்ணம் அடிகளார்

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தாலும் சுனாமியாலும் பாதிக்கப்பட்டுள்ள வடமராட்சி கிழக்குப் பகுதியை மீளக்கட்டி யெழுப்புவதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பங்கு காத்திரமானது என தாளையடி புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை வணபிதா ஜேசுரட்ணம் அடிகளார் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு தாளையடிப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட உபஅஞ்சல் அலுவலக திறப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது ஏற்பட்டுள்ள சுமுகமான சூழ்நிலையில் வடமராட்சி கிழக்குப் பகுதியில் பல்வேறுபட்ட அபிவிருத்திச் செயற்திட்டங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் இப்பகுதியின் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டு செயற்திட்டங்களுக்கு அமைச்சரின் பங்களிப்பு மிகவும் காத்திரமாக அமைந்துள்ளது.

அத்துடன், எதிர்காலங்களில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பிலும் அவர் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருவதை நாம் கண்டுணர்ந்து வருகின்றோம். இதனிடையே இன்று திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த உபஅஞ்சல் அலுவலகமானது பொது மக்களுக்கான தனது சேவைகளை சிறப்பான முறையில் முன்னெடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றும் போது,

யுத்தம் முடிவிற்கு வந்த பின்னர் மீண்டும் இப்பிரதேசத்தை பசும்சோலையாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள், செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் தான் மக்களுக்கான பல்வேறுபட்ட சேவைகளைக் கருத்திற் கொண்டு இந்த உபதபால் அலுவலகமும் இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ள நிலையில் இதன் தரத்தை மேலும் உயர்த்துவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.



இந்நிலையில், அரசினால் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் குறித்து தமிழ் ஊடகங்கள் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு வரும் நிலையில் மக்கள் உண்மையை உணர்ந்து கொள்ளும் வகையில் விழிப்புடன் இருக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் யாழ்.பிராந்திய அஞ்சல் அத்தியட்சகர் புஸ்பநாதன், மருதங்கேணி பிரதேச செயலர் திருலிங்கநாதன், ஈ.பி.டி.பியின் வடமராட்சி இணைப்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன் உட்பட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

## மருத்துவ பரிசோதனை

(வவுனியா)

வவுனியா நகரசபைக்குட்பட்ட பிரதேசத்தில் உணவு கையாளும் நிலையங்களில் பணிபுரிவோருக்கான மருத்துவ பரிசோதனைகள் இன்று முதல் இடம்பெறவுள்ளதாக நகரசபை பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இன்று முதல் 22, 23 ஆம் திகதிகளில் காலை 9 மணியில் இருந்து மாலை வரை இடம்பெறவுள்ள மருத்துவ பரிசோதனைகளில் உணவு கையாளும் நிலையங்களில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் கலந்து கொண்டு மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டு சான்றிதழைப் பெறவேண்டும்

மேலும் நெருப்புக்காய்ச்சலுக்கான தடுப்பூசி மற்றும் வயிற்றுப் புழுவுக்கான சிகிச்சைகளும் உணவு கையாளும் நிலையங்களின் பணியாளர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (160)

## ஜாதிக சம்பத சீட்டிழுப்பில் சுன்னாக வாசிக்கு 20 இலட்சம்

(சுன்னாகம்)

தேசிய லொத்தர் சபையின் சுன்னாக விற்பனை முகவரான சண்முகதாஸ் சுபாசினி என்பவருடாக, பிரபாகரன் என்பவரால் விற்பனை செய்யப்பட்ட ஜாதிக சம்பத சீட்டிழுப்பில் வியாபாரி ஒருவரால் 20 இலட்சம் ரூபா வெல்லப்பட்டுள்ளது.

கடந்த 16 ஆம் திகதி சனிக்கிழமைக்குரிய சீட்டிழுப்பில் குறித்த வியாபாரிக்கு போனஸ் இலக்கத்துடன் 5 இலக்கங்கள் சரியாக பொருந்தியதை அடுத்தே இவருக்கு இப்பணப்பரிசில் கிடைத்துள்ளது. (95)


ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவருகிறது வாரமலர்.

வாரமலர் தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்... 21. 03. 2013

- ஈராக்கில் 'பெஷன் பொலிஸ்'
- ஹலால் முஸ்லிம் மக்கள், தமிழ் மக்கள் ஜெனீவா!
- 1272 வருடங்களுக்குப் பின்னர் ஐரோப்பாவைச் சேராத பாப்பரசர்
- தமிழக உண்ணாவிரதங்கள் ஈழத் தமிழர்களுக்கு உதவுமா?








சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

# தொடரை வென்றது இலங்கை



(கொழும்பு)

பங்களாதேஷ் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இதன் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் இலங்கை அணி கைப்பற்றிக் கொண்டது.

இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட இறுதி டெஸ்ட் போட்டி நேற்றுக் கொழும்பில் நிறைவடைந்தது. இதில் இரண்டாவது இனிங்ஸிற்காக நான்கு விக்கெட்டுக்களை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நான்காம் நாள் ஆட்டத்தை பங்களாதேஷ் அணி தொடர்ந்தது. ரங்கன ஹேரத்தின் சுழற்பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் திணறிய பங்களாதேஷ் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் இரண்டாவது இனிங்ஸிற்காக பங்களாதேஷ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 265 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கப்டன் எம். ஹகீம் 40, ஹசி 26, அபுல் ஹசன் 25, இக்பால் 59, ஜே. இஸ்லாம் 48 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிறப்பான முறையில் செயற்பட்ட ஹேரத் 89 ஓட்டங்களைக் கொடுத்து ஏழு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மற்றும் எரங்க இரண்டு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு 160 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இலங்கை அணி, முதல் விக்கெட்டை விரைவாக இழந்தது. தொடர்ந்து களமிறங்கிய சங்கக்கார டில்சானுடன் இணைந்து பொறுப்பாக ஆடினர். இந்த ஜோடி 94 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பிரிக்கப்பட்டது. இறுதியில் இலங்கை அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் டில்சான் 57, சங்கக்கார 55 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஆர். இஸ்லாம் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இவ்வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை இலங்கை அணி 1-0 என்ற கணக்கில் கைப்பற்றிக்கொண்டது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக ஹேரத், தொடர் நாயகனாக சங்கக்கார ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். பங்களாதேஷ் முதல் இனிங்ஸ் 240. இலங்கை முதல் இனிங்ஸ் 346.

## ஏமாற்றம் அளித்த தொடர் தோல்வி



(மொகாலி)

இந்திய அணியுடனான டெஸ்ட் தொடரை வெல்ல முடியாமலும், சமன் செய்ய முடியாமலும் போனது எங்களுக்கு ஏமாற்றம் அளிக்கிறது என அவுஸ்ரேலிய அணிக் கப்டன் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

தோல்வியைச் சந்திப்பது கடினமான விடயமாகும். எல்லா ஆட்டத்திலும் வெற்றி பெறவே நாங்கள் விரும்புகிறோம். வெற்றி பெற வேண்டும் என்ற விருப்பத்துடன் வந்த இந்தப் போட்டித் தொடரில் நாங்கள் வெற்றி பெறாதது எங்கள் வீரர்களுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது. கடின உழைப்பு இல்லாததால் நாங்கள் தோல்வியைசந்திக்கவில்லை. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த நாங்கள் கடினமாக உழைத்து வருகிறோம். தொடரை வெல்ல முடியாமலும், சமன் செய்ய முடியாமலும் போனது எங்களுக்கு ஏமாற்றம் அளிக்கிறது. டில்லியில் நடைபெறும் கடைசி டெஸ்டில் வெற்றி கண்டு நாட்டுக்கு திரும்ப நாங்கள் விரும்புகிறோம். என்னுடைய உடல் தகுதி காரணமாக அடுத்த டெஸ்டில் நான் பங்கேற்க முடியாமல் போகுமா என்பது எனக்கு தெரியாது. நான் தேர்வாளர்களுடன் இதுபற்றி பேசவில்லை. வட்சன் கப்டனாக இருப்பார் என்பது தான் எனது கற்பனை யாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

# நடுவருக்கு தடை விதித்தது பங்களாதேஷ்



(டாக்கா)

கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்ட பங்களாதேஷ் நடுவர் நாதிர் ஷாவிற்கு 10 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு இந்தியத் தொலைக்காட்சி வெளியிட்ட புலனாய்வு செய்தியில் பாகிஸ்தானின் நதீம் கவுரி, அனீஸ் சித்திக், பங்களாதேஷின் நாதிர் ஷா, சர்புதுல்லா சைகத், இலங்கையின் காமினி திசநாயகே, மவுரிஸ் வின்ஸ்டன், சாகரா கல்லாகே ஆகிய நடுவர்கள் பிடிபட்டனர். இவர்கள் பணம் பெற்றுக் கொண்டு வீரர்களுக்கு தவறாக ஆட்டமிழப்புக் கொடுத்தது உள்ளிட்ட பல முறை கேடுகளில் ஈடுபட்டது அம்பலமானது.

இது தொடர்பாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபை (பி.சி.பி.,) விசாரணை நடத்தியது. இதில், நாதிர் ஷா மீதான சூதாட்ட மற்றும் ஊழல் புகார் உண்மையென தெரிய வந்தது. சர்புதுல்லா விடுவிக்கப்பட்டார்.

இது குறித்து பி.சி.பி., வெளியிட்ட அறிக்கையில், நாதிர் ஷாவிற்கு 10 ஆண்டுகள் தடை விதிக்கப்படுகிறது.இந்தக்காலத்தில் பி.சி.பி.,க்கு உட்பட்ட போட்டிகளில் இவர் பணியாற்ற இயலாது. தண்டனையை எதிர்த்து இவர் மேன்முறையீடு செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பி.சி.பி.,யின் இந்த முடிவை சர்வதேச கிரிக்கெட் சபை வரவேற்றுள்ளது. இதுபோன்ற நடவடிக்கைகள் கிரிக்கெட் வளர்ச்சிக்கு ஆரோக்கியம் மிக்கதொன்றாகவே நாம் பார்க்கின்றோம். அத்துடன் ஏனைய நாட்டு கிரிக்கெட் சபைக்கும் எடுத்துக்காட்டாக இந்த நடவடிக்கை அமைந்திருக்கின்றது. இதுபோன்ற தவறுகளை இழைக்கும் நடுவர்களை இனங்கண்டு இனிவரும் காலங்களில் கிரிக்கெட்டில் அவர்களை ஒதுக்கவேண்டும் எனவும் சர்வதேச கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கால்பந்தின் முதல்வன்

(பரிஸ்)

உலகில் அதிக சம்பளம் வாங்கிய கால்பந்து வீரர்கள் வரிசையில், இங்கிலாந்தின் டேவிட் பெக்காம், முதலிடம் பிடித்தார்.பிரான்சின் கால்பந்து வார இதழ் கடந்த ஆண்டில் அதிக சம்பளம் வாங்கிய கால்பந்து வீரர்களின் பட்டியலை வெளியிட்டது. இதில் நான்கு முறை சிறந்த கால்பந்து வீரருக்கான பிபா விருது வென்ற ஆர்ஜென்ரீனாவின் மெஸ்சி, போர்த்துக்கலின் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஆகியோரை பின்னுக்குதள்ளி, இங்கிலாந்தின் டேவிட் பெக்காம் முதலிடம் பிடித்தார். இங்கிலாந்து கால்பந்து வீரர் டேவிட் பெக்காம் கடந்த 2012 டிசம்பர் மாதம் அமெரிக்காவின், லாஸ் ஏஞ்சல்ஸ் கேலக்ஸி அணியில் இருந்து விடைபெற்றார். பின் கடந்த ஜனவரி முதல் பரிஸ் நாட்டின் கிளப் அணியான பரிஸ் செயின்ட்- ஜெர்மெயின் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். பெக்காம் கடந்த ஆண்டில் (2012-13) மட்டும் ரூ.252 கோடி சம்பாதித்துள்ளார். இதில் ரூ.12 கோடி போட்டியில் பங்கேற்றதற்காக சம்பளமாக பெற்றுள்ளார். தவிர, ரூ.9 கோடி போனஸ் பெற்றுள்ளார். எஞ்சியுள்ள ரூ.231 கோடி விளம்பர ஒப்பந்தங்கள் மூலம் சம்பாதித்துள்ளார். இவருக்கு அடுத்து ஆர்ஜென்ரீனாவின் நட்சத்திர வீரர் மெஸ்சி, ரூ.245 கோடி சம்பளம் பெற்றுள்ளார். இதில் ரூ.91 கோடி சம்பளம் மற்றும் போனஸ் பெற்றுள்ளார். தவிர, ரூ.154 கோடி விளம்பர ஒப்பந்தங்கள் மூலம் பெற்று இரண்டாவது இடம்பிடித்தார். போர்த்துக்கலின் கிறிஸ்டியானா ரொனால்டோ ரூ.210 கோடியுடன் (ரூ.94 கோடி) மூன்றாவது இடத்தில் உள்ளார். இதேவேளை,அதிக சம்பளம் பெற்ற பயிற்சியாளர் வரிசையில், ரியல் மட்ரிட் அணியின் தலைமை பயிற்சியாளர் போர்த்துக்கலின் ஜோஸ் மரியோ (ரூ.98 கோடி) முதலிடம் பிடித்தார். அடுத்த இரண்டு இடங்களில், இத்தாலியின் கார்லோ ஆன்சிலோட்டி (அணி: பரிஸ் செயின்ட்- ஜெர்மெயின், ரூ.84 கோடி), மார்செல்லோ லிப்பி (அணி: சீன கிளப் அணியான குவான்குசூ எவர்கிராண்டே, ரூ.77 கோடி) உள்ளனர்.





# வட்சன் ரெடி

பயிற்சியாளரின் கட்டளைக்கு கீழ்ப்படிய மறுத்ததால், ஒழுங்கு நடவடிக்கையாக மொகாலி போட்டியில் இருந்து நீக்கப்பட்ட அவுஸ்ரேலிய அணியின் துணை கப்டன் வட்சன்உடனடியாகநாடு திரும்பினார். மனைவியின் பிரசவத் தின்போது உடன் இருப்பதற்காகவே ஆஸி. வந்ததாக அவர் கூறினாலும், அணி நிர்வாகத்தின் கடுமையான நடவடிக்கையால் அதிருப்தி அடைந்திருந்தார்.

டெஸ்ட்போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவது பற்றியும் அவர் தீவிரமாக ஆலோசித்து வருவதாகத் தகவல் வெளியானது. இந்த நிலையில், நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ள (மார்ச் 22) கடைசி டெஸ்ட் போட்டியில் விளையாடுவதற்காக அவர் சிட்னியில் இருந்து இந்தியா சென்றுள்ளார். ஆஸி. அணிக்காக அதிக டெஸ்ட் போட்டிகளில் விளையாட வேண்டும் என விரும்புவதாகவும் வட்சன் தெரிவித்துள்ளார்.

# தவானுக்கு சேவாக் பாராட்டு

(புதுடில்லி)

அதிவேக சதம் அடித்த தவானை, இந்திய அணியின் முன்னாள் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சேவாக் பாராட்டியுள்ளார்.

மொகாலியில் இந்தியா, அவுஸ்ரேலிய அணிகள் மோதிய மூன்றாவது டெஸ்ட் நடந்தது. இதில் சேவாக் நீக்கப்பட்டு, அவரது புதுடில்லி மாநிலத்தைச் சேர்ந்த தவான் அறிமுக வீரராக களமிறங்கினார். அசத்தலான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய இவர், 85 பந்துகளில் சதம் அடித்து உலக சாதனை படைத்தார்.

இது குறித்து சேவாக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தவானுடன் இதற்கு முன் டில்லி மற்றும் வடக்கு மண்டல அணிக்காக இணைந்து விளையாடியுள்ளேன். அதில் ஒரு முறை கூட இப்படிப்பட்ட ஆட்டத்தைப் பார்த்ததில்லை.

முதல் இன்னிங்சில் அவுஸ்ரேலிய அணி 408 ஓட்டங்கள் குவித்த நிலையில், அறிமுக வீரராக களமிறங்கிய தவான், எவ்வித நெருக்கடியும், பயமும் இல்லாமல், அதிரடியாக சதம் அடித்து அசத்தினார். இவரை நினைத்து பெருமைப்படுகிறேன். சிறப்பான திறமை வெளிப்படுத்திய தவான், இதைத் தொடர வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.




இந்துக்கல்லூரி அணிக் கப்டன் விருந்தினர்களிடம் கிண்ணத்தைப் பெற்றுக்கொள்வதையும், இந்துக்கல்லூரி அணியையும் காணலாம்.

# கல்கோபன், வாமணன் சிறப்பாட்டம் வென்றது யாழ். இந்துக்கல்லூரி

(கொக்குவில்)

கல்கோபன், வாமணன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் யாழ். இந்துக் கல்லூரி அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இந்துக்களின் போர் இனிங்ஸ் போட்டியைத் தொடர்ந்து யாழ். இந்துக் கல்லூரி அணிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரி அணிககும் இடையில் இடம்பெறும் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி, ஆரம்பத்தில் ஒரு முனையில் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் பங்குஜன் அதனை ஈடு செய்யும் வகையில் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்துக்கொண்டிருந்தார். அவருக்குத் துணையாக சிறிது நேரம் ஆதித்தன் தாக்குப் பிடித்தார். இறுதியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 43.1 ஓவரில் அனைத்துவிக்கெட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பங்குஜன் எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 60, ஆதித்தன் 34, நிசாந்தன் 19 லிங்கநாதன் 10 ஓட்டங்களைப் பெற்றனர். மதுசன் மூன்று, ருக்ஸ்மன், பானுகோபன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 192 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். இந்துக் கல்லூரி அணி கல்கோபன், வாமணன், சஜீபன் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வெற்றிபெற்றது. இறுதியில் யாழ். இந்துக் கல்லூரி அணி 43.1 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் கல்கோபன் ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 57, சஜீகன் 35, வாமணன் ஆட்டமிழக்காது 35 ருக்ஸ்மன் 15 மதுசன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பங்கஜன், சிலோஜன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயனாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த வாமணன், சிறந்த பந்து வீச்சாளராக இந்துக் கல்லூரி அணியைச் சேர்ந்த மதுசன், சிறந்த துடுப்பாட்ட வீரராக கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்தபங்குஜன், சிறந்த களத்தடுப்பாளராக அதே கல்லூரி அணியைச் சேர்ந்த சத்தியன் தெரிவு செய்யப்பட்டனர்.

இது வரையில் இரு அணிகளும் மூன்று வெற்றிகளைப் பதிவாக்கியுள்ளமை குறிப் பிடத்தக்கது.

இப்போட்டி நிகழ்வில் பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள், இரு அணி ஆதரவாளர்கள், இரசிர்கள் எனப் பலர் கலந்துகொண்டு போட்டியைக் கண்டு களித்தனர். (93)

# கொக்குவில் கே.சி.சி.சி.யின் கிரிக்கெட் தொடர் விரைவில்

(கொக்குவில்)

கொக்குவில் கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகத்தினால் இவ்வாண்டுக்கான கிரிக்கெட் தொடர் விரைவில் நடத்தப்படவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்ட ரீதியில் இடம்பெறவுள்ள இப்போட்டித் தொடரில் பங்குகொள்ள விரும்பும் அணிகளை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும், அணி நிரலிடல் 31ஆம் திகதி இடம் பெறும் எனவும், போட்டிகள் அடுத்த மாதம் 6ஆம் திகதி நடைபெற ஒழுங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (54)

## வாய்ப்புக் குறைவு

டெஸ்ட் கிரிக்கெட்டில் சேவாக், கம்பீர் மீண்டும் தொடக்க ஜோடியாக களம் இறங்குவதற்கான வாய்ப்புஏறக் குறைய முடிந்து விட்டதாக நினைக்கிறேன். ஆனால் அவர்களின் சர்வ தேச கிரிக்கெட் வாழ்க்கை முடிந்து விடவில்லை என இந்திய அணியின் முன்னாள் கப்டன் கவாஸ் கர் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க தொடருக்கான (ஆண்டின் இறுதியில்) இந்திய அணியில் சேவாக், கம்பீரால் இடம்பிடிக்க முடியும். மொகாலி டெஸ்டில் தவான், விஜய் ஆடிய விதத்தின் மூலம் சேவாக், கம்பீர் மீண்டும் நுழைவதற்கான கதவு அடைக்கப்பட்டு விட்டதாகக் கருதவில்லை. தேர்வாளர்கள் என்னநினைக்கிறார்கள் என்பதை என்னால் சொல்ல முடியாது. ஆனால் தென்னாபிரிக்கத் தொடருக்கான அணியில் 4 தொடக்க வீரர்கள் இடம்பெறவாய்ப்பு உள்ளது. வழக்கமாக 3 தொடக்க ஆட்டக்காரர்கள் தான் அணியில் சேர்க்கப்படுவார்கள்.இன்னொரு வீரரை3ஆவதுவரிசையில் விளையாட வைக்க முடியும்என வும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வலய மட்ட மென்பந்து கிரிக்கெட் இறுதியில் கொழும்புத்துறை இந்து.ம.வி.

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய அணி தகுதிபெற்றுள்ளது.

யாழ்ப்பாண கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் தொடர் கடந்த திங்கட்கிழமை யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இச்சுற்றுப் போட்டி பத்து ஓவர்களைக் கொண்ட தொடராக இடம்பெற்றது.

முதலாவது போட்டியில் அச்சுவேலி மத்திய கல்லூரி அணியும், கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் முதலில் ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 10 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 53 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அச்சுவேலி மத்திய கல்லூரி அணி ஏழு ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 20 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வயைத் தழுவியது. இதனைத் தொடர்ந்து காலிறுதிப் போட்டிகள் நடைபெற்றன.

இதில் முதலாவது காலிறுதிப் போட்டியில் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய அணியும், கொக்குவில் இந்துக்கல்லூரி அணியும் மோதின. முதலில் ஆடிய கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய அணி 10 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி ஒன்பது ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதன் மூலம் கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி ·பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணியும், சென். ஜோண்ஸ் கல்லூரி அணியும் மோதின. முதலில் ஆடிய யாழ். இந்துக் கல்லூரி அணி 10 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 57 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி ஒன்பது ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 32 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதன் மூலம் யாழ். இந்துக் கல்லூரி அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இதனைத் தொடர்ந்து அரையிறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் யாழ். இந்துக் கல்லூரி அணியும், கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய அணியும் மோதின. இதில் முதலில் ஆடிய யாழ். இந்துக் கல்லூரி அணி 10 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 65 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய அணி 9.4 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

முதல் முறையாக வலய மட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய அணி தகுதிபெற்றுள்ளமை குறிப் பிடத்தக்கது. இப்போட்டி நிகழ்வில் வலயக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், விளையாட்டுக்காக பொறுப்பாசிரியர்கள், பயிற்றுநர்கள், வீரர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்துகொண்டு போட்டியைக் கண்டுகளித்தனர். (42)

# வவுனியா கோட்ட மட்ட கரப்பந்து வெற்றிபெற்ற பாடசாலைகள்

(வவுனியா)

வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் கோட்ட மட்ட கரப்பந்தாட்ட போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. வயது அடிப்படையில் இடம்பெற்ற இப்போட்டி நிகழ்வின் முடிவுகள் வருமாறு:

15 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தினை வவுனியா இந்துக்கல்லூரியும் இரண்டாமிடத்தினை அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயமும், மூன்றாமிடத்தினை பண்டாரிகுளம் விபுலானந்தாக்கல்லூரியும், 17 வயதுஆண்கள் பிரிவில் முதலாமிடத்தினை வவுனியா இந்துக்கல்லூரியும், இரண்டாமிடத்தினை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயமும், மூன்றாமிடத்தினை வவுனியா முஸ்லீம் மகா வித்தியாலயமும் பெற்றுள்ளன.

19 வயது ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தினை வவுனியா இந்துக்கல்லூரியும் இரண்டாமிடத்தினை பண்டாரிகுளம் விபுலானந்தாக்கல்லூரியும், மூன்றாமிடத்தினை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலமும், பெண்கள் பிரிவில் முதலாமிடத்தினை இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்,இரண்டாமிடத்தினை நெளுக்குளம் கலைமகள் மகாவிததியாலமும் பெற்றுள்ளன. இப்போட்டி நிகழ்வில் பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்த பலர் கலந்துகொண்டனர். (160)

# போரின் உண்மையான விலையை அமெரிக்க சமூகம் அறிய வேண்டும் – ப்ராட்லி மானிங்!




ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் நடந்ததை அமெரிக்க மக்கள் அறியவேண்டும் என்பதற்காகவே தான் இராணுவ ஆவணங்களை கசியவிட்டதாக, விக்கிலீக்ஸிற்கு அமெரிக்க தூதரக இரகசியங்களை ஒப்படைத்த வழக்கில் சிறைத் தண்டனையை அனுபவித்து வரும் அமெரிக்க இராணுவ உளவுத்துறை ஆய்வாளர் ப்ராட்லி மானிங் தெரிவித்துள்ளார். மேரிலாண்ட் இராணுவ மையத்தில் நடக்கும் விசாரணையின் போது ப்ராட்லி மானிங் தனது நிலைப்பாட்டை விளக்கினார்.

அவர் கூறியதாவது: போரின் உண்மையான விலையை அறிய பொது சமூகத்திற்கு உரிமை உண்டு. தாங்கள் அன்றாடம் பழகிய மக்களை அமெரிக்க இராணுவம் எவ்வாறு குறிவைக்கிறது என்பதை தெரியவேண்டும். இராணுவத்தின் இலட்சியம் மற்றும் பணிக்கு அப்பால் மனிதர்களை வெறுமனே பிடித்து கொலை செய்ய நாங்கள் நிர்ப்பந்திக்கப்பட்டோம். அமெரிக்க பொது சமூகம் இதையெல்லாம் தெரிந்துகொள்ளவேண்டும். அங்கு நிகழ்ந்ததை நீங்கள் தெரிந்துகொண்டால் நமது வெளிநாட்டுக் கொள்கைகள் குறித்தும் இராணுவ கொள்கைகள் குறித்தும் சூடேறிய விவாதங்களுக்கு அது காரணமாகும்.

சாப்பர் ஹெலிகொப்டர் குழுவின் இரத்த தாகத்தில் மனம் நொந்துபோய் நான் ஆவணங்களை ஒப்படைக்க தீர்மானித்தேன். 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அமெரிக்காவிற்கு விடுமுறையில் வந்தபோது ஆவணங்களை பிரதியெடுத்து மெமரி டிஸ்கில் சேமித்து வைத்திருந்தேன். வாஷிங்டன் போஸ்ட் மற்றும் நியூயோர்க் டைம்ஸை அணுகிய போது அவர்கள் மறுத்துவிடவே, நான் விக்கிலீக்ஸை அணுகினேன். உலக வர்த்தக மைய கட்டிட தாக்குதல் தொடர்பான 5 இலட்சம் எழுத்துத் தகவல்களை கசியவிட்டு வெளியிட்டதைத் தொடர்ந்து நான் விக்கிலீக்ஸை கவனிக்க துவங்கினேன் என்று ப்ராட்லி மானிங் கூறினார். இராணுவ நீதிமன்றத்தில் தனது கருத்தை 35இற்கும் மேற்பட்ட பக்கங்களில் எழுதி ப்ராட்லி மானிங் கொண்டு வந்தார். முழுமையான இராணுவச் சீருடையில் மானிங் வந்தார். தனது வாதத்தை வாசித்து முடித்த பிறகு ப்ராட்லி மானிங் பல மணிநேரங்கள் நீண்ட நீதிபதியின் கேள்விகளுக்கு பதில் அளித்தார்.

விக்கிலீக்ஸின் ஸ்தாபகர் ஜூலியன் அஸாஞ்சேவுக்கு இராணுவ இரகசியங்களை அளித்த காரணத்தால் ஒருவருடத்திற்கும் மேலாக தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார் ப்ராட்லி மானிங். இராணுவ நீதிமன்றம் அவர் மீது சுமத்திய 22 குற்றங்களில் 10 ஐ தவிர, மீதமுள்ளவற்றை அவர் மறுத்துள்ளார். பாக்தாத்தில் இன்டெலிஜன்ஸ் அனலிஸ்டாக பணியாற்றும் வேளையில் ஆப்கான் - ஈராக் போர் ஆவணங்கள், குவாண்டனாமோ சிறைக்கொட்டடியின் சித்திரவதைகள் குறித்த ஆவணங்கள், அமெரிக்க அபாச்சே ஹெலிகொப்டர் 2007ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12ஆம் திகதி பதிவு செய்த வீடியோ ஆகியவற்றை மானிங் கசியவிட்டார். இரண்டு ராய்ட்டர்ஸ் செய்தியாளர்கள் உள்பட சிவிலியன்கள் பலர் கொல்லப்பட்ட அந்த வீடியோவை விக்கிலீக்ஸ் collatteral murder என்ற பெயரில் வெளியிட்டது.

நன்றி: மாத்யமம்

---



12ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தை ஆட்சி செய்த அரசன் ரிச்சர்ட்-1. அவரின் பதப்படுத்தப்பட்ட இதயத்தை அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். 1199-ஆம் ஆண்டு ரிச்சர்ட்-1 பிரான்ஸில் கொல்லப்பட்டார். அவரின் உடல் 12 நாள்களுக்கு பின்பு கண்டெடுக்கப்பட்டது. அப்போது அடிவயிற்றில் உள்ள உள்ளுறுப்புகள் எல்லாம் நீக்கப்பட்டு அவரின் உடல் புதைக்கப்பட்டது. அவரின் இதயத்தை மட்டும் தனியாக எடுத்து பாதரசம், குங்கிலியம், வாசனைத் திரவியங்கள் போன்றவற்றால் பதப்படுத்தியிருக்கிறார்கள். இப்போது அந்த இதயத்தைக் கண்டுபிடித்துள்ள


## பதப்படுத்திய மன்னர் இதயம்!

ஆராய்ச்சியாளர்கள் அதனை பதப்படுத்த பயன்படுத்தப்பட்ட பொருள்கள் குறித்த குறிப்புகள் அனைத்தும் பைபிளில் இருந்து எடுக்கப்பட்டவை என்றும், அந்தப் பொருள்கள் குறித்த குறிப்புகள் வேறெந்த பழமையான புத்தகங்களிலும், வரலாற்றுக் குறிப்புகளிலும் இல்லை என்றும் கூறுகின்றனர்.

---


## ஒன்பது செய்திகள்!

- கடலின் அதிகபட்ச ஆழம் 9 கிலோமீற்றர்கள்.
- எவரெஸ்ட் சிகரத்தை அடைய 9 வழிகள் உள்ளன.
- புல்லாங்குழலுக்கு 9 துளைகளுண்டு.
- நடிப்பு இயலில் 9 வகை ரசங்கள் (நவரசம்) உள்ளன.
- தாளங்களில் 9 வகைகளுள்ளன.
- 9 வகை மணிகள் நவமணிகள் எனப்படும்.
- மனித உடலில் 9 துவாரங்கள் உள்ளன.
- எறும்பு தனது எடையை விட 9 மடங்கு எடையைச் சுமக்கவல்லது.
- பிறை நிலாவைவிட முழு நிலா 9 மடங்கு அதிகப் பிரகாசமாக இருக்கும்.



---

## இப்படியும் கண்காட்சி! ஏற்ற பார்வையாளர்கள்!



ஆஸ்திரியா நாட்டின் தலைநகர் வியன்னாவில், நிர்வாண சிற்ப கண்காட்சி சமீபத்தில் நடந்து முடிந்தது. "1800 முதல் இன்று வரை நிர்வாண மனிதர்கள்" என்ற பெயரில் நடைபெற்ற, இக்கண்காட்சியில், 1800ஆம் ஆண்டு முதல் இன்று வரை காணப்பட்ட மனிதர்களின் வாழ்க்கை குறித்த, பல்வேறு நிலைகளிலான, நிர்வாண சிற்பங்கள், 300க்கும் மேற்பட்ட ஓவியங்கள், புகைப்படங்கள் ஆகியவை இடம் பெற்றன. கடந்தாண்டு, ஒக்ரோபர் 12ஆம் திகதி, இங்குள்ள லியோ வேர்ள்ட் மியூசியத்தில் துவங்கிய இக்கண்காட்சியை, நிர்வாணமாக சென்று பார்க்க, சிலர் விரும்பினர். அங்குள்ள நிர்வாணத்தினர் சங்கம் சார்பில், நிர்வாணமாக, கண்காட்சியை பார்வையிட, தனி நேரம் ஒதுக்கித் தருமாறு, கண்காட்சி அமைப்பாளர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டது.

அதை ஏற்றுக்கொண்ட, கண்காட்சி அமைப்பாளர்கள், ஒவ்வொரு வாரமும், திங்கட்கிழமை மாலை நேரத்தை, நிர்வாணத்தினர் மட்டும், பார்வையிட அனுமதி அளித்தனர். மேலும், "நிர்வாண சிற்ப கண்காட்சியை காண, நிர்வாணமாக வாருங்கள்!" என்று அறிவிக்கவும் செய்தனர். இதை அடுத்து, ரசிகர்கள் நிறைய பேர் கண்காட்சியை காண ஆர்வத்துடன் நிர்வாணமாக, படை எடுத்தனர். 250க்கும் மேற்பட்டோர், நிர்வாணமாக சென்று, கண்காட்சியை பார்வையிட்டும், புகைப்படம் எடுத்தும், வந்துள்ளனர்.

கண்காட்சியை நிர்வாணமாக சென்று பார்வையிட்டு வந்த, ப்ளேரியன் கோலன்பெர்க் என்பவர் கூறுகையில், "கண்காட்சியை காண, ஷூ மற்றும் சொக்ஸ் தவிர, பிற அனைத்து ஆடைகளையும் களைந்து, நிர்வாணமாக சென்று பார்வையிட்டேன். கண்காட்சியில் இருந்தவர்கள் முதலில் என்னைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தாலும், என்னைப் போல் நிறைய பேர் அங்கு நிர்வாணமாக வந்த பிறகு, அவர்களது அதிர்ச்சி மறைந்து விட்டது. கண்காட்சியை காண இவ்வாறு நடந்து சென்றது, "த்ரில்லிங்"காக, இருந்தது..." என்றார்.

வியன்னாவில், நான்கு மாதங்களாக நடைபெற்ற இக்கண்காட்சியை, மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்டோர் பார்வையிட்டுள்ளனர்.

---



## திருமணம் செய்ய ஏற்ற வயது?

உதட்டின் மேல் உள்ள மச்சத்தால் மிகவும் பிரபலமடைந்தவர் ஹொலிவுட் மொடல் சின்டி கிரா·.போர்ட். 47 வயதாகும் இவர் இன்றும் மொடலிங்கில் கொடிகட்டிப் பறக்கிறார். இவரின் உதட்டின் மேல் உள்ள மச்சத்துக்காகவே பல நூறு பத்திரிகைகளின் அட்டைப் படத்தில் இடம் பிடித்தவர். 1995ஆம் ஆண்டில் "போர்ப்ஸ்" பத்திரிகை நடத்திய கருத்துக்கணிப்பில் உலகிலேயே அதிகம் சம்பளம் வாங்கும் மொடல் என்று தேர்ந்தெடுக்கப்பட்டவர். "மென்ஸ் ஹெல்த்" என்ற பத்திரிகை நடத்திய கருத்துக்கணிப்பில் "வாழ்நாள் கவர்ச்சி நாயகிகள் 100" என்ற பட்டியலில் இடம்பிடித்தவர். இவர் பிரபல ஹொலிவுட் நடிகர் ரிச்சர்ட் கிரே என்பவரை 1991ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். 1995ஆம் ஆண்டு அவரிடம் இருந்து விவாகரத்து பெற்றார். 1998ஆம் ஆண்டு ரேன்டே என்ற மொடலை திருமணம் செய்தார். இவர் சமீபத்தில் தன்னுடைய முதல் திருமணம் முறிந்ததைக் குறித்து கருத்து தெரிவித்துள்ளார். "நான் ரிச்சர்ட் கிரேவை திருமணம் செய்துகொள்ளும்போது எனக்கு 22 வயதுதான். அது திருமணத்திற்கான சரியான வயதில்லை. அதனால்தான் அவரிடம் இருந்து விவாகரத்து பெற்றேன்" என்று கூறியிருக்கிறார்.

# கோடம்பாக்கத்தில் புதிய காதலர்கள்....

நடிகர் சிம்புவும், நடிகை ஹன்சிகாவும் காதலித்து வருவதாக கோலிவுட்டில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. சிம்புவும், நயன்தாராவும் சில வருடங்களுக்கு முன் நெருக்கமாக பழகி வந்தனர்.



இருவரும் நெருக்கமாக இருக்கும் புகைப்படங்கள் இணையதளத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. அதனையடுத்து அவர்கள் உறவில் திடீர் விரிசல் ஏற்பட்டு, இருவரும் பிரிந்தனர். இந்நிலையில் "தான் காதல் வலையில் விழுந்திருப்பதாகவும் கடந்த ஒரு வருடமாக ஒரு நடிகையுடன் நட்பு மலர்ந்திருக்கிறது. அவர் தமிழ் நடிகை அல்ல. உறுதியாகும் வரை தனது காதல் பற்றி எதையும் வெளிப்படையாக சொல்லப்போவதில்லை என்று சிம்பு கூறி வந்தார். இப்போது சிம்பு - ஹன்சிகா ஜோடியாக ஐதராபாத்தில் சுற்றித் திரிந்தத தகவல்கள் வெளியாகியுள்ளன. இருவருமே நெருக்கமான நட்புடன் பழகி வருகின்றனர் என்று பேசப்படுகிறது. தற்போது சிம்பு - ஹன்சிகா ஜோடி வாலு, வேட்டை மன்னன் ஆகிய 2 படங்களில் ஜோடியாக நடித்து வருகின்றனர்.

ஆண்ட்ரியாவுக்கு, நடிகை, பாடகி, மொடல், டப்பிங் ஆர்ட்டிஸ்ட் என பல முகங்கள் உண்டு. அழகும், திறமையும் கொட்டிக் கிடக்கும் ஆண்ட்ரியாவிடம், சர்ச்சைகளுக்கும் பஞ்சம் இல்லை. "கொலவெறி" இசையமைப்பாளர், அனிருத்துடன், ஒரு விருந்தில், முத்தம் கொடுத்தது போன்ற புகைப்படங்கள், சில நாட்களுக்கு முன், இணையத் தளத்தில் வெளியாகி, சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இப்போது, அவரைப் பற்றி, மீண்டும் ஒரு பரபரப்பான விஷயம் பேசப்படுகிறது. பிரபல மலையாள இயக்குநர் பாசிலின் மகனும், மலையாள முன்னணி இளைய நடிகருமான, பாஹித் பாசிலும், ஆண்ட்ரியாவும் காதலிப்பதாக செய்தி. இவர்கள் இருவரும் இணைந்து, ஒரு மலையாளப் படத்தில் நடித்து வருகின்றனர். அப்போது தான், தங்களுக்குள் காதல் ஏற்பட்டதாக, பாஹித் பாசிலே, பேட்டி அளித்துள்ளாராம். "ஆண்ட்ரியா, நகைச்சுவை உணர்வு உடையவர், திறமையானவர், அழகானவர் என, அந்த பேட்டியில் ஆண்ட்ரியாவை பற்றி, அடுக்கி கொண்டே போகிறார், பாஹித். ஆனால், ஆண்ட்ரியா தரப்பிலிருந்து, இதற்கு இன்னும் பதில் இல்லையாம்.



சென்ற வருடத்தில் மிக வெற்றிபெற்ற படங்களில் நடித்தவர் விஜய் சேதுபதி. துபாயில் பார்த்துக்கொண்டிருந்த ஒடிட்டர் வேலையை விட்டுவிட்டு சினிமாவில் நடிக்க சென்னைக்கு வந்தவர். கூத்துப்பட்டறையில் சேர்ந்து நடிப்பை முறைப்படி கற்றுக்கொண்டு தமிழ்த்திரையில் ஜெயித்தார் விஜய் சேதுபதி. தென்மேற்கு பருவக்காற்று அதன்பின்னர் பீட்சா தொடர்ந்து நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம் என்று பிரமாண்டமாய் வளர்ந்து நிற்கிறார். 2017 வரைக்கும் அவரிடம் கால்ஷீட் இல்லையாம். இப்போதெல்லாம் "அட்டகத்தி" படத்தில் இரண்டாவது கதாநாயகியாக நடித்திருந்த ஐஸ்வர்யா தன் படங்களில் இருக்க வேண்டும் என்று ஆசைப் படுகிறாராம். விஜய் சேதுபதி நடித்துக் கொண்டிருக்கும் ரம்மி, அடுத்த படமான "பண்ணை யாரும் பத்மினியும்" படத்திலும் ஐஸ்வர்யாவுக்கு சான்ஸ் வாங்கிக் கொடுத்திருக்கிறாராம். இனி விஜய் சேதுபதியை வைத்து படம் எடுக்க நினைப்பவர்கள் முதலில் ஐஸ்வர்யாவிடம் "திகதி" வாங்கினால் போதும் என்று கிசுகிசுக்கிறது கோடம்பாக்க வட்டாரம்.



பிரிட்டன் இளவரசர் வில்லியமின் மனைவி, கேத் மிடில்டனுக்கு, ஒரு அழகான தங்கை உண்டு. பிப்பா மிடில்டன் என்பது, இவரது பெயர். இவரும், வில்லியமின் தம்பி, ஹாரியும், காதலித்து வருவதாக, முதலில் தகவல் வெளியாகி, பின், அந்த தகவல், தவறு என, அறிவிக்கப்பட்டது. இப்போது விஷயம், இவர்களின் காதலைப் பற்றியதல்ல; பிப்பாவின் சொந்த வாழ்க்கை பற்றியது. பிரிட்டனின், மிக பிரபலமான, "வெயிட்ரஸ்" என்ற சூப்பர் மார்க்கெட்டில், சமீபத்தில் வேலைக்கு சேர்ந்துள்ளார், பிப்பா. அதற்காக, சூப்பர் மார்க்கெட்டில், புளி, சீரகத்தை, பொட்டலம் போட்டுத் தரும் வேலை என, கற்பனை குதிரையை தட்டி விடாதீர்கள்.

அந்த சூப்பர் மார்க்கெட் நிறுவனம், ஒரு பத்திரிகையை நடத்தி வருகிறது. அதில், சுவையான சமையல் டிப்ஸ்களை எழுதும் பணியில் தான், அவர் சேர்ந்துள்ளார். "பிரிட்டன் இளவரசரின் மச்சினி, சூப்பர் மார்க்கெட்டில் வேலை செய்யலாமா?" என, யாராவது, பிப்பாவிடம் கேட்டால், "எங்க அக்கா வேலை பார்த்தால் தான் தப்பு; நான் பார்த்தால் தப்பில்லை..." என, விளக்கம் அளிக்கிறார்.

## அக்காவுக்குத் தப்பு தங்கைக்கு இல்லை!



# போராட்டக் குற்றவாளிகள்...

**- இரா. சோமசுந்தரம் கட்டுரையிலிருந்து.**

கடந்த ஒரு வார காலமாக, இலங்கைத் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்றும், இனஅழிப்புப் படுகொலை நடத்திய ராஜபக்ஷ போர்க்குற்றவாளியாக அறிவிக்கப்பட வேண்டும் என்றும் "உரத்த குரல்" தமிழ்நாட்டில் பரவலாக ஒலிக்கத்தொடங்கியுள்ளது.

ஆனாலும், அரசியலால் பிளவுபட்டு ஒலிக்கும் இந்தக் குரல், மக்கள் குரலாக மாறாமல் இருக்கிறது என்பதோடு, இலங்கைத் தமிழர்கள் மீதான அக்கறை, வேதனைகளைக் காட்டிலும், இந்தப் பிரச்னையில் வெற்றி யாருக்கு என்பதில்தான் ஒரு "நீயா, நானா?" போட்டி நடந்துகொண்டிருக்கிறது.

"டெசோ" அறிவித்த ஒரு நாள் பொதுவேலைநிறுத்தம் "வெற்றி" என்று தி.மு.க. கூறியது. "வேலைநிறுத்தம் வெற்றியில்லை; இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படவில்லை" என்று மற்ற கட்சிகள் பேசின.

பொதுவேலைநிறுத்தம் வெற்றியடையவில்லை என்று சொன்னால், அதன் பொருள் இங்கு வாழும் தமிழர்களுக்கு இலங்கைத் தமிழர்கள் மீது அக்கறை இல்லை என்பதாக ஆகிவிடுமே என்றுகூட இவர்கள் நினைத்துப் பார்க்கவில்லை.

நாடாளுமன்றத்தில் இரு அவைகளிலும் தமிழகக் கட்சிகளின் அனைத்து உறுப்பினர்களும் தொடர்ந்து அமளி செய்ததால், "இது குறித்து உரிய நேரத்தில் பரிசீலிப்போம்" என்று மத்திய அரசு அறிவித்தது. இந்த வெற்றிக்கு ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் இடம்பெற்றுள்ள தி.மு.க.வுக்குப் பங்கு கிடைத்துவிடுமோ என்று பேச்சு எழுந்தபோதே, மாணவர்கள் போராட்டம் எழுந்தது.

"இது அரசியல் தூண்டுதல் இல்லாமல் தன்னிச்சையாக எழுந்த போராட்டம்" என்று கூறிய அரசியல் தலைவர்கள், மாணவர்களைப் போய்ப் பார்த்துப் பேசி அரசியலாக்கினார்கள். "ஒரு கோடி மாணவர்கள் பங்குபெறும் போராட்டம் நடைபெறும்" என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லகண்ணு அறிவித்தார்.

அடுத்த நாளே எல்லா கலைக்கல்லூரிகளும் மூடப் பட்டு, விடுதிக்ளைவிட்டு மாணவர்கள் வெளியேற்றப் பட்டனர். ஒவ்வொரு வீட்டிலும் பெற்றோர்களின் எதிர்வினை என்ன? தங்கள் பிள்ளைகளிடம் என்ன சொல்லிக் கொண்டிருக் கிறார்கள்? இதுபற்றி அரசியல் தலைவர்கள் அறிவார்களா?

இந்தப் போராட்டத்தால் பத்திரிகைகளில் பரபரப்பு ஏற்பட்டாலும், பரீட்சைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தி ஒவ்வொரு பெற்றோர் மனதிலும் இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு எதிரான நிலைப்பாட்டை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை உணர்வார்களா?

முதலில் களம் இறங்கிய லயோலா கல்லூரி மற்றும் திருச்சி புனித வளனார் கல்லூரி மாணவர்கள், தங்கள் உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டனர். மற்ற கலைக்கல்லூரி மாணவர்களும், சட்டக் கல்லூரி மாணவர்களும் போராட்டத்தைத் தொடர்ந்து வருகின்றனர். மாணவர் போராட்டம் தன்னிச்சையானது என்றால் ஏன் பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி மாணவர்களால் நடத்தப்பட வில்லை? "போட்டோ" எடுத்துக்கொண்டு, ரயில் மறியல் "போஸ்" கொடுத்த பிறகு ரயில் இயங்க அனுமதித்த போராட்ட ஆர்வம் எந்த வகையில் தன்னிச்சையானது? காலவரையற்ற உண்ணாவிரதத்தில் தலைவர்கள் அல்லவா ஈடுபட வேண்டும்?

மாணவர் போராட்டத்தில், வெற்றி தி.மு.க.வை விட்டுக் கைநழுவிப் போகக்கூடாது என்பதால், "கோரிக்கை ஏற்காவிட்டால் கூட்டணியிலிருந்து விலகுவோம்" என்று ஒரே போடு போட்டு, இந்த தொடர்ஓட்டத்தில் முந்தி ஓடிக்கொண்டிருக்கிறது தி.மு.க.

இதனிடையே, சில சிறு அமைப்புகள் உள்ளே நுழைந்து, இலங்கைத் தமிழர் மீதான அக்கறையைக் காட்டிட, தமிழகம் வரும் அப்பாவி சிங்களவர்களை அடித்து உதைத்து தங்களை முன்னிலைப்படுத்திக் கொள்கின்றன. இதன் விளைவுகளைப்பற்றி அவர்களுக்குக் கவலையே இல்லை.



எவரோ ஒரு ஊர் பேர் தெரியாத, சிக்கிக்கொண்ட சிங்களவரிடம் "வீரத்தைக்" காட்டுவதால், அடிபடப் போவது, சாகப்போவது இவர்கள் இல்லை. இங்கே சிங்களவருக்கு இவர்கள் தரும் அடிக்கு பதிலடியை நிச்சயமாக இவர்கள் வாங்கப் போவதில்லை; இலங்கையில் உள்ள தமிழர்கள் மீதுதான் "பாண்டியன் பிரம்படியாக" விழும் என்பதை உணர்ந்திருந்தால் இவர்கள் இங்கே வரும் "யாரையோ" அடித்து அரசியல் நடத்த மாட்டார்கள்.

தமிழ்நாட்டிலிருந்து கொழும்புக்குப் போய் ஜவுளி உள்ளிட்ட வியாபாரம் செய்து பிழைக்கும் 2,000 தமிழ் வியாபாரிகள் மீது இந்த அடி விழும் என்பதையும் தமிழக மீனவர்களைக் கூடுதல் கோபத்துடன் இலங்கைக் கடற்படை தாக்கும் என்பதையும் இவர்கள் உணரவில்லை.

இலங்கைக் கடற்படை அட்டூழியம் செய்வது உண்மை என்றாலும் மற்றொரு கசப்பான உண்மையை நாம் ஒப்புக்கொள்ள்த்தான் வேண்டும்.

இலங்கை இராணுவம் இந்திய எல்லைக்குள் புகுந்து தாக்கிய சம்பவங்களே இல்லை. எல்லை தாண்டிச் செல்வோர் வழக்கமாக நம் மீனவர்கள்தான், அதை நம் மீனவர்களும் மறுக்கவில்லை.

போராட்டமும் எதிர்ப்பும் உளப்பூர்வமாகவும், அறிவுபூர்வமாகவும் இருக்க வேண்டும். அரசியல் தலைமையைத் தக்க வைத்துக்கொள்ளத்தான் போராட்டம் என்றால், நாம் இலங்கைத் தமிழர்களுக்கு அளிக்கப்போவது மறுவாழ்வு அல்ல - மறுபடியும் துன்பம்.

## மார்ச் 20 உலக குருவிகள் தினம்.

# சிட்டுக்குருவி

**பல** ஆண்டுகளாக மார்ச் மாதங்களில் பத்திரிகைகளில் அடிக்கடி இடம்பெறும் செய்தி சிட்டுக்குருவிகள் அழிந்து வருகின்றன என்பது. அதற்கான முக்கிய காரணங்கள் நகரமயமாதல், செல்போன் கோபுரத்திலிருந்து வரும் மின்காந்தஅலைகள் என்றும் எனவே அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்றெல்லாம் அக்கட்டுரைகளில் சொல்லப்பட்டிருக்கும். இவையெல்லாம் எந்த அளவிற்கு உண்மை?

சிட்டுக்குருவியின் நிலை அவ்வளவு பரிதாபகரமாக உள்ளதா? இக்கேள்விக்கான விடையை அறியமுற்படும் முன் பல சங்கதிகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

சிட்டுக்குருவிகள் உலகின் பல பகுதிகளில் பரவியுள்ள ஒருபறவையினம். இப்பறவைகள் மனிதர்கள் இருக்கும் பகுதிகளிலேயே அதிகம் தென்படும். உச்சந்தலையில் சாம்பல் நிறமும், தொண்டை கறுப்பாகவும், உடலின் மேலே அரக்கு நிறத்திலும் இருப்பவை ஆண் குருவிகள். பெட்டையின் உடலில் இதைப்போன்ற நிறங்கள் இருக்காது, மாறாக வெளிறிய பழுப்பு நிறத்திலும் அதன் முகத்தை கொஞ்சம் உற்று நோக்கினால் கண்களின் மேலே நீண்ட புருவமும் இருபபதைக் காணலாம். தானியங்கள் விற்கும் கடைகளின் வாசலிலும், சந்தைகளிலும், நம் தெருக்களிலும் பறந்து திரிவதை எளிதில் காணலாம். சில நேரங்களில் நம் வீடுகளிலுள்ள சுவர் இடுக்குகளில்கூட வந்து கூடமைக்கும். சிறுவயதிலிருந்து நாம் பார்த்துப் பழகிய பறவைகளில் சிட்டுக்குருவிகள்தான் முதலிடம் வகிக்கும்.

ஓர் உயிரினம் அழிந்துகொண்டு வருகிறது என்று சொல்வதற்கு முன் அதற்கான ஆதாரங்களை நாம் முன் வைக்கவேண்டும். முன்பு 20,000 இருந்தது இப்போது வெறும் 500 தான் இருக்கிறது என்று சொல்லும் போது, ஒரு காலத்தில் இருந்த அதன எண்ணிக்கை நமக்குத் துல்லியமாக தெரிந்திருக்கிறது. இதுவே அடிப்படைத் தகவல். பிறகே அந்த உயிரினம் எண்ணிக்கையில் குறைந்துபோன தற்கான காரணத்தை ஆராய முற்படுவோம்.

இந்த அடிப்படைத் தகவல்களை தெரிந்துகொள்ளவே பல ஆண்டுகள் ஆராய்ச்சியில் ஈடுபடவேண்டும். இந்தத் தகவல் இல்லாமல், நாம் பார்க்கவில்லை என்பதற்காக அவை அழிந்து வருகின்றன என்றும் அதற்கான காரணங்களையும் தக்க ஆதாரங்களின்றி கூறுவது சரியல்ல.

சிட்டுக்குருவி அழிந்து வருவதாகக் கூறப்படும் தகவல்கள் எல்லாம் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை. சிட்டுக்குருவிகளைப் பற்றி இங்கிலாந்தில் 1940-களிலிருந்து இன்று வரை ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.


பல பறவையியலாளர்கள் அந்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து அங்குள்ள சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கையைப் பல ஆண்டுகளாக கணக்கெடுத்து வருகின்றனர்.

ஒரு காலத்தில் பல இடங்களில் பரவியிருந்த சிட்டுக்குருவியை 2002ஆம ஆண்டு அந்நாட்டில் அழிவின் விளிம்பில் இருக்கும் பறவைகளின் பட்டியலில் அந்நாட்டு அறிவியலாளர்கள் சேர்த்துவிட்டனர். சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கை நகரப் பகுதிகளிலிருந்து முன்பு இருந்ததை விட சுமார் 90 சதவீதம் வீழ்ச்சியடைந்துவிட்டதாகப் பலகாலமாக நடத்தப்பட்டுவரும் ஆராய்ச்சியின் வாயிலாகத் தெரிய வந்தது.



இங்கிலாந்தில் 1920களிலேயே சிட்டுக்குருவிகள் கொஞ்சம் கொஞ்சமாக எண்ணிக்கையில் குறையத் தொடங்கின. அதாவது குதிரைவண்டிகள் போய் மோட்டார்வாகனங்கள் வந்த காலங்களில். குதிரைவண்டிகளில் கொண்டுசெல்லப்படும் மூட்டைகளிலிருந்து சிந்தும் தானியங்களையும், குதிரைகளின் கழிவுகளிலுள்ள செரிக்கப்படாத தானியங்களையும் உட்கொண்டு வாழ்ந்து வந்த சிட்டுக்குருவிகள் மோட்டார்வாகனங்களின் எண்ணிக்கை உயரத்தொடங்கிய பின் குறைய ஆரம்பித்தன.

எனினும் 2005ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் சுமார் 13 மில்லியன் சிட்டுக்குருவிகள் இருப்பது தெரியவந்தது. ஆனால் 1994 முதல் 2000 வரை நடத்தப்பட்ட கணக்கெடுப்பில் ஐரோப்பாவின் பல பகுதிகளில் சிட்டுக்குருவிகள் எண்ணிக்கையில் சற்றுக் குறைந்தும், ஸ்கொட்லாந்து மற்றும் வேல்ஸில் அதிகரித்தும் காணப்பட்டன. வீட்டுச் செல்லப்பிராணியாக வளர்க்கப்படும் பூனைகளும், நகரிலுள்ள காகங்களும் இவற்றை இரையாகக்கொள்வது, சிட்டுக்குருவிகள் கூடுகட்ட ஏதுவான பல புதர்ச் செடிகள் கொண்ட தோட்டங்கள் இல்லாமை, இனப்பெருக்கக் காலங்களில் குஞ்சுகளுக்குத் தேவையான பூச்சிகள் இல்லாமல் போவதால் ஏற்படும் உயிரிழப்பு போன்றவை காரணங்களாக இருக்கலாம் என்று பரவலாகத் தெரிவிக்கப் பட்டது.



ஐரோப்பிய நாடுகளில் சிட்டுக்குருவிகள் பல இடங்களில் மறைந்து வருவதைக்கண்டு அது மற்றைய நாடுகளுக்கும் பொருந்தும் என நினைத்து அவற்றின் இனம் அழியாமலிருக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன் ஒரு நடவடிக்கைதான் மார்ச் 20ஆம் திகதி உலக சிட்டுக்குருவிகள் தினமாகக் அறிவிக்கப்பட்டதாகும்.

சொல்லப்போனால் அமெரிக்காவுக்கு சிட்டுக்குருவிகள் மனிதர்களால் கொண்டு செல்லப்பட்ட காலம் ஒன்று இருந்தது. அவை இப்போது எண்ணிக்கையில் மிகுந்து சில பகுதிகளில் அந்நாட்டுக்குச் சொந்தமான பல பறவைகளின் பெருக்கத்திற்கு இடைஞ்சலாக இருக்கிறது.

இந்நிலையில் சிட்டுக்குருவிகளுக்கு இந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கத்தான் வேண்டுமா? அழிவின் விளிம்பில் தொற்றிக்கொண்டிருக்கும் பல பறவையினங்கள் இருக்கும்போது அவற்றையெல்லாம் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபடாமல் உலகெங்கிலும் காணப்படும் சிட்டுக்குருவிக்காக பரிதாபப்படுவது சரியா? இது எந்த விதத்திலாவது பல்லுயிர் பாதுகாப்பிற்கு உதவுமா?

உதவும். இது வரை புலி போன்ற வசீகரமான விலங்குகளின் மேம்பாட்டிற்கான் திட்டங்களை வகுப்பதற்கும், நிதி ஒதுக்கீடு செய்வதற்கும், விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும்தான் முதலிடம் தரப்பட்டு வந்தது. அந்த வகையில் பல இடங்களிலும் காணப்படும் சிட்டுக்குருவிகளின் பாதுகாப்பிற்காக அதற்கென ஒரு தினத்தைத் தேர்ந்தெடுத்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் நல்லதே.

இந்த விழிப்புணர்வை சிட்டுக்குருவிக்கு மட்டுமே இல்லாமல் பல அழிந்து வரும் பறவையினங்களுக்காகவும் செய்ய வேண்டும். அதற்கு சிட்டுக்குருவி பாதுகாப்பை ஒரு முதல் படியாக எடுத்துக்கொள்ளலாம். பறவைகளால் இயற்கைக்கும் மனிதகுலத்திற்கும் ஏற்படும் நன்மைகளை எடுத்துரைக்க இதைப் போன்ற தினங்களை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ளலாம். இதனால் ஏற்படும் விழிப்புணர்வினால் அவற்றைப் பாதுகாக்கும் எண்ணமும், அவை அழியாமல் இருக்கச் செய்ய வேண்டிய தகுந்த ஆராய்சசியை மேற்கொள்வதற்கான வாய்ப்பும் பெருகும்.

பத்திரிகைகள் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வேளையில் பல நேரங்களில அனுபவமில்லாதவர்களின் கருத்துக்களையோ, வேறு நாட்டில் நடந்த ஆராய்ச்சியின் முடிவுகளையோ வெளியிடுகின்றன. இதன் காரணமாக, மூன்று முக்கிய பிரச்சினைகள் எழுவதற்கான வாய்ப்புகள் உண்டு என்று பறவை ஆராய்ச்சி நிபுணர்கள் கூறுகின்றனர்.

முதலாவதாக பிணந்தின்னிக்கழுகுகளின் நிலையை உதாரணமாகக் சொலலலாம். இப்பறவைகள் அநேகமாக அற்றுப்போய்விட்டன. அடுத்த சந்ததியினர் இப்பறவையை படங்களில் மட்டுமே பார்த்தறியும் நிலை ஏற்பட்டுள்ளது. தகுந்த அடிப்படைத் தகவல் இல்லாத சிட்டுக்குருவியின் வீழ்ச்சியை பெரிதுபடுத்துவதால் அழிவின் விளிம்பில் இருக்கும் இதைப்போன்ற பல பறவைகளைக் காப்பாற்ற வேண்டியதற்கான கவனம் சிதறியோ, திசை திருப்பப்பட்டோ விடுகிறது.

எதற்கு அக்கறை காட்ட வேண்டுமோ அதை விட்டுவிட்டு தேவையில்லாத அல்லது உடனடியாக கவனம் செலுத்தத் தேவையில்லாத ஒன்றிற்காக நம் நேரத்தையும், பணத்தையும் விரயம் செய்வது எந்தவிதத்திலும் உபயோகமாக இருக்காது.

இரண்டாவதாக, இதுதான் இப்பறவைகள் குறைவதற்கான காரணம் என அறிவிக்கப்படுவதால் பலரும் இதையே உண்மையென நம்பிவிடும் அபாயம் உள்ளது. இதனால் இத்துறையில் பல காலமாக ஆராய்ச்சி செய்து வரும் விஞ்ஞானிகள் மற்றும் நிறுவனங்களின் நீண்டகால உழைப்பும் வீணாகிறது.

மூன்றாவதாக மிக முக்கியமானதாக, அத்தகவல்களை அவர்கள் மறுக்கும் போதோ, உண்மையான காரணங்களை முன் வைக்கும் போதோ அவர்களின் கூற்று செல்லுபடியாகாமல் போகும் அபாயமும் உள்ளது.

நீங்கள் சிட்டுக்குருவியின் காதலரா? அது குறைந்து போனதற்காக அனுதாபப்படுகிறீர்களா? அது மட்டுமே போதாது, அவற்றைக் காப்பாற்றுவதற்கு, அவற்றின் எண்ணிக்கையைப் பெருக்கும் அறிவியல்பூர்வமான முயற்சிகளில் பங்களியுங்கள். சிட்டுக்குருவியை பார்க்கும் அதேவேளையில் ஏனைய பறவைகளின் மீதும் கவனம் செலுத்துங்கள். உங்களது ஆர்வமும், அனுதாபமும் சிட்டுக்குருவியிலிருந்து தொடங்கட்டும்.

**- ப.ஜெகநாதன்**

"குதிரைவண்டிகள் போய் மோட்டார் வாகனங்கள் வந்த காலங்களில். குதிரை வண்டிகளில் கொண்டுசெல்லப்படும் மூட்டைகளிலிருந்து சிந்தும் தானியங்களையும், குதிரைகளின் கழிவுகளிலுள்ள செரிக்கப் படாத தானியங்களையும் உட்கொண்டு வாழ்ந்து வந்த சிட்டுக்குருவிகள் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை உயரத்தொடங்கிய பின் குறைய ஆரம்பித்தன."

"சிட்டுக்குருவிகளுக்கு இந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கத்தான் வேண்டுமா? அழிவின் விளிம்பில் தொற்றிக்கொண்டிருக்கும் பல பறவையினங்கள் இருக்கும் போது அவற்றையெல்லாம் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபடாமல் உலகெங்கிலும் காணப்படும் சிட்டுக்குருவிக்காக பரிதாபப்படுவது சரியா? இது எந்த விதத்திலாவது பல்லுயிர் பாதுகாப்பிற்கு உதவுமா?"



# பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கும் முழங்காவில் மகாவித்தியாலயம்




(கிரு-சிகரம்)

மீள்குடியேற்றப்பட்ட காலம் முதல் கிளிநொச்சி முழங்காவில் மகாவித்தியாலயம் பல்வேறு குறைபாடுகளின் மத்தியிலே இயங்கி வருவதாக பாடசாலை அதிபர் கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கிராமப்புற பாடசாலைகளில் ஒரே ஒரு பெரிய பாடசாலையாகக் காணப்படும் இப்பாடசாலையில் மின்சாரம் இல்லாமை பிரதான குறைபாடாகக் கூணப்படுகின்றது.

இந்தப் பிரதேசத்திற்கு வடக்கின் வசந்தம் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ள போதிலும், பாடசாலைக்கு மட்டும் மின்சாரம் வழங்கப்படவில்லை.

பாடசாலைக்கான மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பணவசதி இன்மையே பிரச்சினையாக உள்ளது.

அத்துடன் பாடசாலைக்கு மின்னிணைப்புக்குத் தேவையான இணைப்புக் கட்டணமான 16,500 ரூபாவை மின்சார சபைக்குச் செலுத்தினால் உடனடியாக மின்இணைப்பு வழங்கப்படும் என மின்சாரசபை தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாடசாலைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் மாணவர்களுக்காக வழங்கப்பட்டுள்ள கணினிகள் மற்றும் ஏனைய இலத்திரனியல் சாதனங்கள் என்பன மின்சாரம் இல்லாத காரணத்தால பயன்படுத்தப்படாது உள்ளது.

அத்துடன்,பாடசாலையில் ஆசிரியர்களுக்கான மூன்று விடுதிகளில் ஒன்றுமட்டுமே தற்போது பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளதாகவும், இந்த விடுதியிலும் 15இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் தங்கியிருப்பதுடன், இவர்கள் தமது நீர்த் தேவையைப்பூர்த்தி செய்வதற்கு ஒரு கிணற்றையே நம்பி இருக்கின்றனர்.

ஒரேயொரு கிணறு மட்டுமே இருப்பதால் ஆசிரியர்கள் அதிகாலை 2.00 மணிக்கே எழும்ப வேண்டிய நிலை காணப்படுவதாகவும், இதனால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் அவர் கூறினார்.

அதுமட்டுமன்றி போதிய விடுதி வசதி இன்மையால், வெளி மாவட்டத்தில் இருந்து இப்பிரதேசத்திற்கு வருகைதரும் ஆசிரியர்கள் வாடகை வீடுகளில் தங்கி நின்று கற்பிப்பதாகவும், இதனால் அவர்களின் சம்பளத்தில் பாதி வீட்டு வாடகைக்கே செலவிடப்படுவதாகவும் ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

மேலும், பாடசாலையில் விளையாட்டு மைதானம் புனரமைக்கப்படவேண்டிய தேவை உள்ளதாகவும், உயர்தர வணிகப்பிரிவு, கலைப்பிரிவுகளுக்கான ஆசிரியர்களுக்கான தேவை உள்ளதாகவும் அதிபர் மேலும் குறிப்பிட்டார்.

# வவுனியாவில் 108 பேருக்கு சுயதொழில் கொடுப்பனவு

(வவுனியா)

வடமாகாண சமூக சேவைத் திணைக்களத்தினால் வவுனியா பிரதேச செயலகப்பிரிவில் 108 பேருக்கு சுயதொழில் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக மாவட்ட சமூகசேவைகள் உத்தியோகத்தர் எஸ். எஷ். வாசன் தெரிவித்தார்.

சுயதொழில் கடன் பெறவுள்ளவர்களுக்கு முதலாம்கட்டம், இரண்டாம்கட்டம் என இரு கட்டங்களாக இவ் உதவிகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்த அவர், கொடுப்பனவுகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் வவுனியா பிரதேசசெயலக சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி பிறேமா விமலேந்திரனை தொடர்பு கொண்டு கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

சுயதொழில் கொடுப்பனவுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**(முன்னைய தொடர்)**

யேசுதன் யோகரதி (கிழவிகுளம், பாலமோட்டை, வவுனியா), வாசின் ஜெசீமா (125, பளளிகீதி, மதீனாநகர், மகாறம்பைகுளம்), சேகர் ராணி (95,சமயபுரம்,மருக்காரம்பளை,வவுனியா), செல்வ ராஜ்சந்திரன் சஞ்சலாதேவி (புளியடி வீதி, மகாறம் பைகுளம்), புவனேஸ்வரன் சரஸ்வதி (142,மது ராநகர்,ஆசிக்குளம்,வவுனியா), கந்தசாமி பவானி (சேவாலங்கா உள்வீதி, தவசிக்குளம்), ஜெய்சங்கர் சுபாசினி (88/5,கணேசபுரம், வவுனியா), தங்கவேல் புஸ்பராகம் (273,மறவன்குளம், சாஸ்தரி கூழாங்குளம், வவுனியா), யோகராசா சதாசிவம் (மறவன்குளம், வவுனியா),

(தொடரும்..)

## சிறுபோக நெற்செய்கை ஆர்வம் காட்டும் விவசாயிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு குளத்தின்கீழ் சிறுபோக நெற் செய்கையை மேற்கொள்ள விவசாயிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர். பருவம் தப்பிய மழையால் முன்னர் நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் நெல் அறுவடைசெய்ய முடியாத நிலையில் பெரும் நஷ்டத்தை எதிர் நோக்கி வந்தனர்.

இந்நிலையில் நஷ்டத்தை சீர் செய்யும் வகையில் தற்போது நிலவும் சீரான காலநிலையை அடுத்து இரணைமடு குளத்தின்கீழ் சிறுபோக செய்கையை மேற்கொள்வதற்கு விவசாயிகள் மும்முரமாக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதன் முதற்கட்டமாக விவசாயிகள் தமது வயல் நிலங்களை பண்படுத்தும் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். (கே)



இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் சுயதொழில் ஓய்வூதியத்திட்டத்தின் பயன்களை பொதுமக்களுக்கு கூறும் நிகழ்வு கிளிநொச்சி அம்பாள்குளம் கிராம அலுவலரின் அலுவலகத்தில் நடைபெற்ற போது மாவட்ட இணைப்பதிகாரி பா.பிரதீபன் உரையாற்றுவதையும், கலந்துகொண்ட பொதுமக்களையும் காணலாம். (90)

# ஆயுர்வேதம்



## தோல் சுருக்கம், வறட்சி நீங்க!

உடல் உட்புற வாயுதோஷத்தின் ஆதிக்கத்தினால், உடல் வெளிப்புறத் தோல் வறண்டு போகலாம். அம்மா, அப்பாவினுடைய குணங்களைத் தழுவித்தான் குழந்தை பிறக்க முடியும் என்பதால், அவர்களிடமிருந்தே நீங்கள் இந்தப் பிரச்சினையை அடைந்திருக்கவும் வாய்ப்பிருக்கிறது. வெளிப்புறத்தில் உள்ள வறண்ட பனிக் காற்றினால், தோல் வறட்சி ஏற்படலாம். எண்ணெய் தேய்த்துக் குளிக்காதிருப்பது, உட்புற நெய்ப்பைத் தரும் தேங்காய், எள்ளு, நெய் போன்றவற்றைப் போதுமான அளவில் உணவில் சேர்க்காதிருப்பது, இரவில் நெடுநேரம் கண் விழித்திருப்பது, குடலில் வாயு, மலம் ஆகியவற்றின் சேர்க்கையை உதாசீனப்படுத்தி வெளியேற்றுவதில் காட்டும் அலட்சியம் போன்ற சில காரணங்களால், தோல் வறண்டு சுருக்கமாகவும், குதிக்காலில் வெடிப்பும் ஏற்படலாம்.

அதனால் நீங்கள் தோலை மென்மையாக பதப்படுத்தும் முறைகளை உட்புறத்திலும், வெளிப்புறத்திலும் செய்து கொள்வது மிகவும் அவசியம். சூடான புழுங்கலரிசிச் சோற்றுடன், இரண்டு அல்லது மூன்று கரண்டி, அதாவது 10 – 15 மி.லீ. பசுநெய்யை உருக்கிவிட்டு, சிறிதளவு உப்புக் கலந்து காலை, இரவு முதல் உருண்டையைச் சாப்பிட்ட பிறகு, சாம்பார், ரசம் ஆகியவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளலாம். நெய்யும், உப்பும் சேரக்கூடிய அன்னத்தினால், உடலுக்குத் தேவையான நெய்ப்பு எனும் எண்ணெய்ப் பசை உடனடியாகக் கிடைக்கும் என்று ஆயுர்வேதம் ஒரு வியத்தகு செய்தியைத் தெரிவிக்கிறது. அதுபோலவே, கறுப்பு எள்ளை நன்றாகத் தூளாக்கி, சூடான சோற்றுடன் நெய் கலந்து சாப்பிடுவதன் மூலமாகவும், குடலில் விரைவாக எண்ணெய்ச் சத்து கொண்ட நெய்ப்பை பெறுவதன் மூலம், தோலில் ஏற்பட்டுள்ள வறட்சியும், சுருக்கமும் நீங்கக் கூடும். வெளிப்புறமாகத் தேங்காய் எண்ணெயை தலை மற்றும் உடலில் தேய்த்து, அரை, முக்கால் மணி நேரம் ஊறிய பிறகு, வெதுவெதுப்பான தண்ணீரில் குளிப்பதும் நல்லதே. எண்ணெய்ப் பிசுக்கை அகற்ற, பச்சைப் பயறு 1 டம்ளர், எலுமிச்சைத் தோல் அரை டம்ளர், வெந்தயம் கால் டம்ளர் ஆகியவற்றை நன்றாகத் தூள் செய்து, அரிசி வடித்த கஞ்சியுடன் குழைத்து, தேய்த்துக் குளிக்கப் பயன்படுத்தவும்.

தேங்காயுடன் சிறிது வெல்லம் கலந்து வாயிலிட்டு மென்று வரும் சாறைக் குடித்துவிட்டு, சக்கையைத் துப்பிவிடுவதால், உடல் வனப்பை அடைவதுடன், தோல் சுருக்கம், வறட்சியைப் போக்கி, குதிக்கால் வெடிப்பையும் போக்கிவிடும். உணவில் வறட்சி தரும் கசப்பு, துவர்ப்பு, காரச் சுவைகளைக் குறைத்து, இனிப்பு, புளிப்பு மற்றும் உப்புச் சுவைகளை மிதமாகச் சேர்க்கவும். சோப், பவுடர், ஷாம்பு, செயற்கையான தலைமுடிச் சாயம் போன்றவற்றைத் தவிர்ப்பது நலம். எதிர்காற்றில் அதிக தூரம் பயணம் செய்வதும் நல்லதல்ல.

விதார்யாதி கிருதம் எனும் ஆயுர்வேத நெய் மருந்தை 10 –15 மி.லீ. லேசாக உருக்கி, காலை, மாலை வெறும் வயிற்றில் சாப்பிடுவதால், வாயு மற்றும் பித்த தோஷங்களின் ஆதிக்கத்தை மட்டுப்படுத்தி, கபத்தின் நெய்ப்பு எனும் சிறந்த குணத்தைத் தோலிலும், உடல் உட்புறத்திலும் நீங்கள் சம்பாதித்துக் கொள்ளலாம். குதிக்கால் வெடிப்பும் அதன் மூலம் குணமாகலாம். பிண்ட தைலம் எனும் ஆயுர்வேத மூலிகைத் தைலத்தை குதிக்கால் வெடிப்பில் பூசுவதும் நல்லது தான்.

### எளிய வைத்தியம்

* வெள்ளை முள்ளங்கியை இடித்துச் சாறெடுத்து ஒரு டம்ளர் சாறு அருந்தினால் சிறுநீரக நோய்கள் குணமாகும்.
* இஞ்சிச் சாற்றோடு சிறிது மிளகுத் தூள் சிறிது சீரகத்தூள் கலந்து சாப்பிட்டால் புளித்த ஏப்பம் நிற்கும், நன்கு சமிபாடுமாகும்.
* அதிமதுரத் தூளை தேனில் குழைத்து உண்ண, எல்லாவகை இருமலும் குணமாகும்.
* கீழாநெல்லி இலையை உப்போடு அரைத்து, அதை உடல் முழுவதும் பூசிவர சொறிசிரங்கு குணமாகும்.
* வில்வப்பட்டையைக் கஷாயம் செய்து குடித்து வந்தால் விக்கல், நெஞ்சு வலி நீங்கும்.
* துளசி இலைகளை வாயில் போட்டு நன்றாக மென்று பின் பற்களைத் துலக்கி வர பல்வலி தீரும்.
* கல் உப்பை வாங்கியவுடன் லேசாக சூடாக்கி சமைக்க உடல் நலனுக்கு நல்லது.
* குழந்தைகளுக்கு நெய் அவசியம் சேர்க்கவேண்டும். மூளை வளர்ச்சிக்கு நல்லது.

# பிரதம நீதியரசர் மொகான் மட்டக்களப்பிற்கு விஜயம்

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் நேற்று மட்டக்களப்பிற்கு விஜயம் மேற்கொண்டார்.

மட்டக்களப்புக்கு விஜயம் செய்த பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், முதலில் மட்டு மறை மாவட்ட ஆயர் கலாநிதி பொன்னையா ஜோசப்பை சந்தித்து ஆசி பெற்றார். இந்த சந்திப்பு மட்டக்களப்பு ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.

இதில் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி சிவபாதசுந்தரம், சிவில் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரன், மட்டக்களப்பு சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் வினோபா இந்திரன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் பலர் கலந்துகொண்டனர்.

இதையடுத்து மட்டக்களப்பு நீதிமன்ற கட்டடத்தொகுதிக்கு பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் விஜயம் செய்தார்.



இதன்போது இவருக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. மட்டக்களப்பு சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி வினோபா இந்திரன் தலைமையில் இந்த வரவேற்பு வழங்கப்பட்டது.

இதன்போது நீதிமன்ற கட்டட வளாகத்தில் பிரதம நீதியரசருக்கான பொலிஸ் அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டது. இதில் கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தரவும் கலந்துகொண்டார். சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், நீதிமன்ற பதிவாளர்கள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

# இலங்கையில் மீண்டும் குடியுரிமை; 3000 அகதிகள் போராட்டம்




இலங்கையில் மீண்டும் தங்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் என கூறி திண்டுக்கல்லில் ஆண், பெண், குழந்தைகள் என 3,000 இலங்கை அகதிகள் உண்ணாவிரதம் இருந்தனர். திண்டுக்கல் மாவட்டத்தில் அடியனூத்து, கோபால்பட்டி உட்பட ஏழு முகாம்களில் அகதிகள் வசிக்கின்றனர். இந்த முகாமைச் சேர்ந்த, 3,000 பேர், திண்டுக்கல்லில் நேற்றுமுன்தினம் உண்ணாவிரதம் இருந்தனர்.

அகதிகள் சிலர் கூறியதாவது:

இலங்கைப் போரின் போது சிங்கள இராணுவத்தினரால் சிறை பிடிக்கப்பட்ட தமிழர்களை விடுவிக்க வேண்டும். தமிழர்களுக்கு இலங்கையில் தனி நாடு வேண்டும். தமிழர்கள் பகுதியில் உள்ள சிங்கள இராணுவம் அகற்றப்பட வேண்டும். சிறுவன் பாலச்சந்திரன் மரணத்திற்கு, இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதில் தர வேண்டும். போர்க் குற்றங்களுக்கு இலங்கை அரசு பொறுப்பேற்க வேண்டும். இங்குள்ள இலங்கைத் தமிழர்கள் அங்கு மீண்டும் குடியமர்த்தப்பட வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# பரமர் சங்கமம்



'பெண்ணெண்டால் பேயும் இரங்கும்' எண்டு செல்லுறே சரியாத்தான் கிடக்குது இல்லையே பின்னை.

இந்த மாதம் தான் உந்தப்பெண்களின்ர உலகத்தினமும் வந்து போனது. அதுதான் சர்வதேச மகளிர் தினம்.

பேய் எண்டது என்ன வெறும் பிராந்திதானே! பேப்பே எண்டு குறிப்பிடுறே அவையளை இல்ல. அவையளிட்ட ஏமாந்து போறவையத்தான் 'பேப்பே' எண்ணலாம்.

இந்த ஒரு மாதத்துள்ளுக்கை மட்டும் பெண்கள் மேற்கொண்ட மோசடிகள் மட்டும் பெண்கள் மேற்கொண்ட மோசடிகள் பற்றிப் பரமர் கனக்கக் கேள்விப்பட்டன. அதிலும் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கை இருந்து மலிதம்.

சண்டிலிப்பாய் வடக்கைச் சேர்ந்த் 26 வயதுடைய மகளும், அவரது தாயாரும் சேர்ந்து, வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகப் பலரிடம் இருந்து 84 கோடியே 50 இலட்சம் ரூபாவையும், ஆயிரத்து 500 தங்கப் பவுண் நகைகளையும் மோசடி மூலமாகச் சுருட்டிக்கொண்டு தலைமறைவான செய்தி தூள் பறந்திச்சு.

இந்தியாவுக்குப் போய் தப்பிக்கொள்ளலாமெண்டு புத்தளம் பகுதியில் தங்கியிருந்தவேண்ர எண்ணத்தில இடி விழுந்ததால ஏமாந்த 'பேப்பே'க்கள் தப்பித்துக்கொண்டினம்.

இதை சொல்லேக்கதான் இன்னொண்டும் ஞாபகம் வருகுது. இப்ப ரெண்டு வருசம் இருக்கும் கொழும்பில வாழ்ந்துவந்த நம்ம தமிழ்ப் பேராசிரியர் ஒருவருடைய மகள், வெளிநாட்டால் வந்திருந்த தனவந்தரான எழுத்தாளரிடம் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் மோசடி செய்து இந்தியாவுக்குத் தப்பிச் சென்றுள்ளார்.

மானிப்பாய் வடக்கைச் சேர்ந்த தங்கவேல் கலா என்பவருக்கு உடுவில்ப் பகுதியைச் சேர்ந்த, கணவனால் கைவிடப்பட்ட 3 பிள்ளைகளின் தாயொருவர் 22 இலட்சங்களுக்கு வங்கியில் பணம் இல்லாமல் காசோலை வழங்கிய மோசடி ஒன்று மானிப்பாய் பொலிஸில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன பெண் மணி மானிப்பாய்ப் பகுதியில் மேலும் பலரிடம் பண மேசடியில் ஈடுபட்டு ஒரு கோடிக்கும் அதிகமான பணத்தைச் சுருட்டிக் கொண்டதாப் புகார்கள் செய்யப்பட்டுள்ளன.

இதேபோன்று மானிப்பாய்ப் பகுதியில் தொலைந்த கைப்பையில் இருந்த எ.ரி.எம். காட்டைப் பயன்படுத்தி அதிலிருந்த 13 ஆயிரம் ரூபாவைத் திருடிய நபரைத் தேடிப் பொலிஸார் வலை விரித்துள்ளதாகவும் மற்றொரு தகவல் கூறுகிறது.

மாத நடுப்பகுதியில் யாழ்ப்பாண பொலிஸால் நடத்தும் பத்திரிகையாளர் கூட்டத்தில் 40 இற்கு மேற்பட்ட வங்கிக் காசோலைகள் மோசடிகளில் 54 இலட்சத்து 38 ஆயிரம் ரூபா நான்கு இடங்களில் சுருட்டப்பட்டிருப்பதாக பதியப்பட்டுள்ளதும் தெரிவிக்கப்பட்டது.

இன்னும் குருநகர் தொடர்மாடிப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் 700 தங்கப்பவுண் நகைகளை பலரிடம் இருந்து சுருட்டிக்கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இக்காலத்தில் அதிகமான பெண்கள் பலவகையான மோசடிகளில் ஈடுபட்டு மாட்டிக்கொண்டிருப்பதை அறிகையில் பெண் என்றதும் இலகுவாக மற்றவர்கள் நம்பி பணத்தையோ; நகையையோ; கையளிப்பது புலனாகிறது.

இதனால்தானோ என்னவோ 'பெண்ணெண்டால் பேயும் இரங்கும்' என்று சொன்னார்களோ? என்ன நான் சொல்லுறே...

# யானை தாக்கியதில் விவசாயி உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் யானை தாக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வாகனேரி, முள்ளிவட்டுவான் பகுதியில் உள்ள வயல்வெளியிலேயே நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

முள்ளிவட்டுவான் பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான பொன்னுத்துரை மயில்வாகனம் என்ற விவசாயியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யானையைக் கண்ட இவர் அருகில் உள்ள குளம் ஒன்றில் பாய்ந்து நீந்தித் தப்பித்துக் கொள்ள முயற்சித்தபோதிலும், இவரைப் பின் தொடர்ந்து துரத்திய யானையும் அந்தக் குளத்தினுள் சென்று இவரை தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைக் கண்ட பொதுமக்கள் இவரது சடலத்தை கரைக்குக் கொண்டு வந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணையை வாழைச்சேனை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# சிறந்த சுற்றுலாத்துறை; இலங்கைக்கு விருது

(கொழும்பு)

அதி சிறந்த சுற்றுலாத்துறை என்ற கௌரவப்பட்டம் இலங்கைக்கு கிடைத்துள்ளது.

சீனா - குவாங்சோவில் கடந்த 7 ஆம் திகதி இடம் பெற்ற நிகழ்வில் இதற்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையின் சுற்றுலாத்துறை அபிவிருத்தி குறித்து மேற்கொள்ளப்பட்ட விரிவாக்கல் பணிகளுக்கு சீன சுற்றுலாத்துறையும் இணைந்து செயல்படுகின்றது.

# முரசின் இன்றைய பலன்

(20.03.2013 – புதன்கிழமை)

நந்தன வருஷம் பங்குனி மாதம் 07 ஆம் திகதி.
நட்சத்திரம் திருவாதிரை. பின்இரவு 3.52 வரை. அட்டமி.
முற்பகல் 11.36 வரை. இராகுகாலம் 01.47 - 12.17 வரை.
சுபநேரம் 4.47 - 6.17 வரை. சித்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தடைகளை வெல்வீர்கள். குடும்பத்தினர் உதவிகரம. தொழில், புதிய பரிமாணம். தாராள பணவரவு. விருந்து உபசரிப்பு. உத்தியோகத்தர் பாராட்டு. |
| ரிஷபம் | அடுத்தவர்களால் குழப்பம். தொழில், மந்தம். எதிர்பார்த்ததை விட் வரவு குறையும். கவலை சூழும். நிதானம், மன ஒருமுகத் தன்மை. |
| மிதுனம் | செயற்பாடுகளில் கவனம் வேண்டும். தேவையற்றவை பேச வேண்டாம். தொழில், தாமதம். புதிய இனங்களில் செலவு. உடல்நலத்திற்கு ஓய்வு அவசியம். |
| கடகம் | உங்களை சிலர் தவறாக புரிந்து கொள்வர். பொறுமை சிக்கல் தீர்க்கும். அளவான பணவரவு. சேமிப்பு செலவுக்கு பயன்படும். கவனம். |
| சிம்மம் | புதிய முயற்சிகளால் தாராள நன்மை. தொழில், வியத்தகு முன்னேற்றம். உபரி வருமானம். பெற்றோரின் தேவை நிறைவேற்றுவீர்கள். உயர்வு. |
| கன்னி | இரசிப்புத்திறன் வளரும். எவரிடமும் நல்அன்பு. தொழில், இடையூறு சரிசெய்வீர்கள். வரவுக்கேற்ப செலவு. பயணத்திட்டத்தில் மாறுதல். பெருமை. |
| துலாம் | தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். செயல்கள் எளிதாகும். தொழில், பலம்பெறும். பணவரவு திருப்தி. வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள். |
| விருச்சிகம் | கூடுதல் திறமை மிளிரும். வாழ்வில் புது நம்பிக்கை. தொழில் சிறந்து, வரவு கூடும். நிலம் தொடரபில் அனுகூல பலன். உறவினர் வருகை. |
| தனுசு | முக்கிய பணி நிறைவேறும். திருப்திகரமான வரவு. உடல் நலம் சீராகும். மேலதிகாரி ஒத்துழைப்பார். நீண்ட நாள் பிரச்சினை தீரும். மகிழ்ச்சி. |
| மகரம் | வாழ்வில் வளம் பெறத் திட்டமிடுவீர்கள். தொழில், அபரிமித வளர்ச்சி. அதிக லாபம். உடன் பிறந்தவர்களுக்கு உதவி. பிள்ளைகளால் பெருமை. |
| கும்பம் | மிகுந்த பொறுமையுடன் செயல்படுவீர்கள். தொல்லை கொடுத்தவர், விலகுவர். தொழில், புதிய சாதனை. பணவரவும், நன்மையும். விருந்து. |
| மீனம் | சஞ்சலம் இருக்கும். மறதியால் தொல்லைகள் வரும். தாய்வழி உறவினரால் நன்மை. பெற்றோரின் விருப்பம் நிறைவேற்றுவீர்கள். |

**18) சரியாயின் ( √ ) எனவும் பிழையாயின் ( X ) எனவும் அடைப்புக்குள் இடுக.**

1) சகல போசுஷக்கையும் கொண்ட ஒருவேளை உணவே கலப்புணவு எனப்படும். ☐

2) சூடான காலங்களில் இளநீர், நெல்லி, எலுமிச்சைப் பானங்களை அருந்தலாம். ☐

3) உணவு உண்ணும் கோப்பைகளை சாம்பல் இட்டு நீரில் கழுவிச் சுத்தப்படுத்தலாம். ☐

4) எலி, கறையான், இராமபாணம் போன்றவை புத்தகங்களை சேதமாக்கும். ☐

5) செல்லப்பிராணிகளை கூடுகளில் அடைத்து வளர்ப்பது பிராணிகளின் சுதந்திரத்தைப் பாதிக்கும். ☐

**19) பின்வருவனவற்றுக்கு விடை தருக.**

1) உணவின் தரத்தை மேம்படுத்த உதவும் பொருட்கள்?

1. .................................... 2. ........................................

2) உணவு பழுதடையாது தடுக்கும் பொருட்கள்?

1. .................................... 2. ........................................

3) உணவைச் சுவையூட்டும் பொருட்கள்?

1. .................................... 2. ........................................

4) மிளகாய்த் தூள் தயாரிக்க உதவும் பொருட்கள்?

1. ..................... 2. ............................ 3. ...................

**20. Underline the most correct word.**

1. My favourite colour is **red / cake / netball**

2. The **snake / cow / giraffe** is long.

3. His father is a **drawing / teacher / hobby**

4. These **is / are / am** my books

5. She is playing **small / books / netball**



## தரம் - 3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை -2013

# கல்வி முரசு



முன்னணி ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்யுங்கள்**


1) அவன் ........................................................... பார்க்கவே வந்தான்.
1) உலவு 2) உளவு 3) உழவு

2) அந்த ஊரிலுள்ள ................................................ யில் நீர் வற்றி விட்டது.
1) ஏறி 2) ஏரி 3) எரி

3) எனது அருகில் இருப்பவர் எனது அம்மா, ஆனால் நான் அவரின் மகன் அல்ல... என்றால் நான் யார்?
1) வளர்ப்பு மகன் 2) மகள் 3) பேரன்


4) அரைவாசிக்கு நிழற்றப்பட்ட உரு எது?

1) 2) 3)




5) சதுரமுகி வடிவத்தை ஒத்த வடிவம் எது?

1) 2) 3)



6) மூன்று வட்டம், இரண்டு சதுரங்கள், மூன்று முக்கோணிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட உரு எது?

1) 2) 3)



7) பின்வரும் பன்மை வாக்கியத்தை ஒருமை வாக்கியமாக எழுதுங்கள்

1) கோழிகள் முட்டையிட்டன ...................................................

2) பசுக்கள் புற்களை மேய்ந்தன ...................................................

8) நிறுத்தற் குறிகளை இடுங்கள்

1) மாம்பழம் பலாப்பழம் வாழைப்பழம் ஆகியவை முக்கனிகளாகும்

2) அடேயப்பா எவ்வளவு பெரிய நீர்வீழ்ச்சி

9) பெட்டியிலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி நான்கு சொற்கள் எழுதுங்கள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வை | ப | ட் | க | ற் | ட | வா | கோ | டு | | ரை |
| வ | | ம் | ர | கா | க் | ல் | ம் | | க | |

1) .................................. 2) ..................................

3) .................................. 4) ..................................

10) வீட்டுத்தோட்டத்தில் காணப்படும் களைபூண்டு எது?
1) மூக்குத்திப்பூண்டு 2) நன்னாரி
3) சீதேவியார் செங்கழுநீர் 4) வெடிபலவன்

11) வேர்க்கொம்பு எனும் மூலிகை மருந்து எதிலிருந்து பெறப்படும்?
1) திப்பிலி 2) இஞ்சி 3) மரமஞ்சள் 4) தீக்குறிஞ்சா

12) கால்நடைகள் விரும்பி உண்ணாத தாவரம் எது?
1) ஆடுதின்னாப்பாலை 2) ஆனையறுகு
3) செவ்வந்தி 4) மூக்குத்திப்பூண்டு

13) பின்வரும் பாடலை வாசித்து விடை எழுதுக.

தேனிருக்கும் இடத்தினைத்
தேடிமொய்க்கும் வண்டுபோல்
சீனியுள்ள இடத்தைத்
தேடி ஊரும் எறும்புபோல்

பழம் நிறைந்த சோலையைப்
பார்த்துச் செல்லும் கிளியைப் போல்
வளம் நிறைந்த நாட்டிலே
வந்து சேரும் மக்கள் போல்

1) இக்கவிதைகளில் வரும் பிராணிகள் எவை? ..................................
2) 'பழங்கள்' என்பதன் ஒருமைச்செல் எது? ..................................
3) 'ஓலை' என்பதன் ஒத்திசைக்கும் சொல் எது? ..................................
4) பழம் நிறைந்த சோலையை நாடிச் செல்வது எது? ..................................
5) 'காடு' என்பதன் எதிர்ச்சொல் எது? ..................................
6) 'தேனிருக்கும்' என்பதை பிரித்து எழுதுக ..................................
7) மக்கள் நாடிச் செல்லும் இடம் எது? ..................................

14) பின்வரும் சிங்களச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களை எழுதுக.

1) பூஸா :........................ 2) கருணாகர :........................

3) (G)கிரவா :........................ 4) கடய :........................



15) பின்வரும் அட்டவணையை நிரப்புங்கள்.

| சேர்த்து எழுதுக. | பிரித்து எழுதுக. |
|---|---|
| 1) இன்சொல் | 1) ........................ |
| 2) ........................ | 2) வாழை + பழம் |
| 3) தபாற்பெட்டி | 3) ........................ |
| 4) ........................ | 4) கடல் + கரை |
| 5) அறிவுரை | 5) ........................ |
| 6) ........................ | 6) முள் + செடி |

16) பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளி நிரப்புக.

| |
|---|
| வெள்ளம் |
| சந்தையில் |
| தந்திரம் |
| குறட்பாக்கள் |
| கருணை |

1) உயிர்கள் மீது .................................. காட்டுவோம்.
2) .................................. காய்கறிகள் வாங்குவோம்.
3) பள்ளமான இடத்தை நாடி .................................. பாயும்.
4) .................................. இரண்டு வரிகளைக் கொண்டன.
5) காகத்திற்கு நரியின் .................................. புரிந்து விட்டது.

17) இடைவெளி நிரப்புங்கள்.

1) பௌத்த மக்களின் பண்டிகைகளில் .................................. ஒன்றாகும்.
2) தமிழ்மொழிப் பாடசாலை விழாவொன்றின் இறுதியில் .................................. இசைக்கப்படும்.
3) பழுதடைந்த பாற்சோற்றிலிருந்து .................................. வீசும்.
4) வீட்டுத்தோட்டத்திலிருந்து நச்சுத்தன்மையற்ற .................................. காய்கறிகள் கிடைக்கும்.
5) உணவில் கருவாடு, மீன், இறைச்சி என்பவற்றுக்குப் பதிலாக தாவர உணவாக .................................. பயன்படுத்தலாம்

- தமிழ்மொழி வாழ்த்து
- தேசிய கீதம்
- துர்நாற்றம்
- புத்தம் புதிய
- வெசாக்
- சித்திரைப் புத்தாண்டு
- சோயா

# முடிவு எடுப்பதில் ஏன் தாமதம் மாநிலங்களவையில் கேள்வி

ஜெனிவா கூட்டத்தில் தாக்கல் செய்யப்படும், இலங்கைக்கு எதிரான அமெரிக்க தீர்மானம் மீது முடிவு எடுப்பதில் ஏன் மத்திய அரசு தாமதம் செய்கிறது? என்று மாநிலங்களவையில அ.தி.மு.க., தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் கேள்வி எழுப்பினர்.

மாநிலங்களவையில் திங்கட்கிழமை நடைபெற்ற பூஜ்ய நேரத்தில், "அமெரிக்க தீர்மானம் மீது முடிவு எடுக்காமல் இந்தியா சாதித்து வரும் மௌனமும், ஐ.நா-வுக்கான இந்திய தூதரின் முரண்பட்ட அறிக்கையும்" என்ற தலைப்பில் தமிழக உறுப்பினர்கள் பேச அனுமதிக்கப்பட்டனர்.

ஐ.நா. மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் இந்திய தூதர் அளித்துள்ள அறிக்கையில், இலங்கை அரசின் போருக்குப் பிந்தைய செயற்பாடுகளுக்காக பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது, இலங்கைத் தமிழர்களுக்காக நீதி கேட்டுப் போராடும் தமிழர்களின் முதுகில் குத்தும் செயலாகும். ஜெனிவா கூட்டத்தில் அமெரிக்காவோ, எந்த நாடோ தீர்மானம் கொண்டு வரட்டும் அந்தத் தீர்மானத்தை வலுப்படுத்தும் வகையில் திருத்தங்களை இந்தியா வலியுறுத்த வேண்டும்.

## தந்தை வழி நடப்போமா?

( யோவான் 8 :31 -42)

ஆபிரகாம் எங்களுடைய தந்தை என்று யூதர்கள் சொல்கிறார்கள். நீங்கள் என்னைக் கொல்ல நினைக்கின்றீர்கள். ஆபிரகாம் அப்படிச் செய்வதில்லை. எனவே ஆபிரகாம் உங்கள் தந்தையல்ல. ஏனென்றால் உங்கள் நடத்தை உங்கள் தந்தை ஆபிரகாமின் நடத்தைக்கு முரணானது என்று யூதர்களைப் பார்த்துக் கூறுகின்றார் இயேசு.

நீங்கள் கடவுள் உங்கள் தந்தை என்று சொல்லுகிறீர்கள். ஆனால் தந்தை உங்களிடம் அனுப்பிய என்னை நீங்கள் ஏற்றுக் கொள்ளாததினால் கடவுளாம் தந்தையை நீங்கள் கடவுளுக்குரியவர்கள் அல்ல என்று கூறுகின்றார் இயேசு.

அப்படியென்றால் அவர்களின் தந்தை யார்? 'நீங்கள் உங்கள் தந்தையைப் போலச் செயற்படுகிறீர்கள்" என்று இயேசு அவர்களைப் பார்த்துக் கூறுகின்றார்.

ஆபிரகாம் அவர்கள் தந்தை இல்லையென்றால், கடவுள் அவர்கள் தந்தை இல்லையென்றால் அவர்கள் தந்தை யார்? 'சாத்தானே உங்களுக்குத் தந்தை" என்று அதிர்வேட்டு வைக்கின்றார் இயேசு. எங்கள் நடத்தை நாம் அடிமையா இல்லையா என்று எங்களைக் காட்டிக் கொடுக்கும் எங்கள் நடத்தை நமக்குத் தந்தை யார் என்று காட்டிக்கொடுக்கும்.

– வி.பி.தனேந்திரா



டில்லி நாடாளுமன்றில் நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்தில் கலந்து கொண்ட (இடமிருந்து) ராஷ்ரிய ஜனதா தள தலைவர் லாலு பிரசாத், பா.ஜ. தலைவர்கள் சுஷ்மா சுவராஜ், அருண் ஜெட்லி, சமாஜ்வாடி தலைவர் முலாயம் சிங்.

# 37 கோடி கறுப்புப் பணம் தமிழகத்தில் பறிமுதல்



தேர்தலில், கறுப்புப் பணம் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க, தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும், என, மத்திய சட்ட அமைச்சர், அஸ்வனி குமார் கூறினார். தேர்தல்களின் போது, கறுப்புப் பணம் அதிக அளவில் பயன் படுத்தப்படுவதாக புகார் எழுந்துள்ளது.

இந்தப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்க தேவையான, அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசும் தேர்தல் கமிஷனும் மேற்கொள்ளும். இது தொடர்பாக, தேர்தல் நடவடிக்கைகளில் சீர் திருத்தம் செய்யும் பணிகளை மேற்கொள்ளும்படி, சட்ட கமிஷனுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

அடுத்த மாத இறுதிக்குள், தன் பரிந்துரைகளை தெரிவிக்குமபடி, சட்ட கமிஷனுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர, அரசியல் கட்சிகளுடனும், தேர்தல் நடவடிக்கைகளில் தொடர்புள்ள அமைப்புகளுடனும், இதுகுறித்து ஆலோசனை நடத்தப்படும். கடந்த மூன்று ஆண்டுகளாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடந்த தேர்தல்களின்போது, கணிசமான கறுபபுப் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில், 37 கோடி ரூபாயும், உ.பி.,யில், 36 கோடி ரூபாயும், ஆந்திராவில் 30 கோடி ரூபாயுமாக கறுப்புப் பணம் பறிமுதல் செய்யப்பட்டது. இவ்வாறு அஸ்வனி குமார் கூறினார்.


# நம்பர் வண் விளையாட்டில் துளியும் நம்பிக்கை இல்லை



குண்டாக இருந்த ஹன்சிகா திடீரென மெலிந்து விட்டார். இது ஹன்சிகாவா இல்லை அவர் தங்கையா என ஆச்சரியப்படும் அளவுக்கு உடல் எடையை கணிசமான அளவு குறைத்து விட்டார். இந்த அதிசயம் எப்படி நிகழ்ந்தது என்று ஹன்சிகாவை கேட்டபோது, "உணவின் அளவை குறைத்து விட்டேன். இடை விடாத உடற்பயிற்சி மட்டுமின்றி, என் சம்பந்தப்பட்ட வேலைகளை நானே இழுத்துப் போட்டு செய்து விடுகிறேன். இது எல்லாம் சேர்ந்து தான் உடல் எடையை குறைத்து விட்டது" என்கிறார்.

ஆனால், சிலர் என்னைப் பார்த்து, தமிழ் சினிமாவில் தொடர்ந்து நம்பர் வண் இடத்தைத் தக்க வைத்துக் கொள்ளத தான், இந்த உடல் குறைப்பா என்கின்றனர். எனக்கு இந்த நம்பர் வண் விளையாட்டில் துளியும் நம்பிக்கை இல்லை என்கிறார் ஹன்சிகா.

# ஆற்றில் கவிழ்ந்தது பேருந்து மஹாராஷ்டிராவில் 22 பேர் பலி



(கொழும்பு)

கோவாவிலிருந்து நேற்று மும்பைக்கு 37 பேர் தனியார் பேருந்து ஒன்றின் மூலம் பயணித்துக்கொண்டிருந்தனர். அந்த பேருந்து மேற்கு மகா ராஷ்டிராவில் உள்ள ரத்னகிரி மாவட்டத்தின் கேட் பகுதியில், பாலத்தின் மீது வந்து கொண்டிருந்தது.

திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து ஆற்றில் தலைகுப்புற கவிழ்ந்தது. இந்த விபத்து அதிகாலை 2.30 மணியளவில் நடந்தது. இந்த கோரவிபத்தில் பேருந்தில் பயணம் செய்த 22 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். பலருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. காயமடைந்த 15 பேர் கேட் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சாரதி தலையில் காயத்துடன் உயிர் தப்பினார்.

# ஒரே வீட்டில் வாழ்க்கை 5 கணவர்களுடன் பெண்



உத்தரகண்ட் மாநில தலைநகரான டேராடூனில் உள்ள கிராமமொன்றில் பெண்ணொருவர் 5 கணவர்களுடன் வசித்து வருகின்றதாக தகவல் வெளியாகியுள்ளது.

அப்பெண்ணின் பெயர் ராஜோவேர்மா என்பதும் கணவர்கள் ஐவரும் சகோதர்கள் என்பதும் அவருக்கு ஒரு குழந்தையும் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எனினும் குழந்தையின் தந்தை ஐவரில் யார் என்பது குறித்து அப்பெண்ணுக்குத் தெரியாது என்றும் இவர்கள் அனைவரும் ஒரே வீட்டில் வசித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

ராஜோவேர்மாவை முதல்முறையாக திருமணம் செய்த கணவரின் பெயர் குட்டு (வயது 21). அவரையே சட்டபூர்வமாகத் திருமணம் செய்துள்ளார். பின்னர் அவர் தனது கிராமத்து வழக்கப்படி கணவரின் சகோதர்களான பாஜு(32), சாந்த் ராம்(28), கோபால் (26), தினேஷ் (19) ஆகியோருடன் வாழ்ந்து வருகின்றார். அதேபோல் சகோதரர்களும் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக இருப்பதாகவும், தனது தாயும் 3 கணவர்களுடன் வாழ்ந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

## இந்தியச் செய்திகள்

### விருது பெறக்கூடாது இலக்கியவாதிக்கு எதிர்ப்பு

இந்திய இலக்கியவாதி கோபி சந்த் நரங், பாகிஸ்தானின் விருதை ஏற்கக் கூடாது என கல்வியாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

சாகித்ய அகாதெமியின் முன்னாள் தலைவரான கோபி சந்த் நரங்குக்கு, பாகிஸ்தான் அரசு குடிமக்களுக்கு வழங்கும் 3ஆவது உயரிய விருதான "சிதாரா- இ- இம்தியாஸ்" கடந்த ஓகஸ்ட் மாதம் பாகிஸ்தான் சுதந்திர தினத்தன்று அறிவிக்கப்பட்டது. இவ்விருது வழங்கும் விழா எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# ஆட்டோவில் வந்த முதல்வர் சிவராஜ் சிங்




அரசு விழாவில் கலந்துகொள்ள வந்த முதல்வர், சிவராஜ் சிங் சவுகான், ஆட்டோவில் வந்து இறங்கி, அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். பாரதிய ஜனதா கட்சி ஆளும், மத்திய பிரதேச மாநிலத்தின், முதல்வராக, சிவராஜ் சிங் சவுகான் உள்ளார். போபால் நகரின், தசரா மைதானத்தில் "அந்த்யோதயா" திட்டத்தை, முதல்வர் நேற்று முன்தினம் தொடங்கி வைப்பதாக இருந்தது. வழக்கமான பாதுகாப்பு கெடுபிடிகளுடன், வாகன அணிவகுப்பில் வந்தால், போக்கு வரத்து நெரிசல் ஏற்படும் என, நினைத்த சவுகான், ஆட்டோவில் வந்து இறங்கினார். அவருடன், மாநில அமைச்சர்கள் சிலரும் வந்தனர். விழாவை, குத்துவிளக்கேற்றி தொடக்கி வைத்த சவுகான் வந்த ஆட்டோவிலேயே மீண்டும் தொடங்கி தன் அலுவலகம் திரும்பினார்.

# இரகசிய வங்கிக் கணக்கு விபரங்களை வெளியிட சுவிஸ் மக்கள் எதிர்ப்பு!

சுவிட்சர்லாந்து வங்கிகளில் கணக்கு வைத்திருப்போர் தொடர்பான விவரங்களை வெளியிட அந்நாட்டு மக்கள் பெரும்பாலானோர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். சுவிஸ் வங்கிகள் கூட்டமைப்பு, தங்கள் நாட்டு மக்களிடையே நடத்திய கருத்துக் கணிப்பில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது. சுவிஸ் வங்கிகளில் கணக்கு வைத்திருக்கும் தங்கள் நாட்டவர்களின் விவரத்தைத் தர வேண்டுமென்று சர்வதேச அளவில் பல நாடுகள் சுவிட்சர்லாந்துக்கு நெருக்கடி அளித்து வருகின்றன. இந்தியர்கள் பலரும் தங்கள் கறுப்புப் பணத்தை சுவிஸ் வங்கிகளில்தான் பதுக்கி வைத்துள்ளனர். அதனை திரும்பக் கொண்டு வர தீவிர முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.


இந்நிலையில் சுவிஸ் வங்கிகள் கூட்டமைப்பு இது தொடர்பாக தங்கள் நாட்டு மக்களிடம் ஒரு கருத்துக் கணிப்பை நடத்தியது. அதில் நமது நாட்டு வங்கிகளில் கணக்கு வைத்திருக்கும் வெளிநாட்டவர்களின் பெயர்கள், அவர்களின் கணக்கில் உள்ள பணம் உள்ளிட்ட



வற்றை சம்பந்தப்பட்ட அரசுகளுக்கு அளிக்கலாமா? என்று கேட்கப்பட்டது. இதில் 83 சதவீத சுவிஸ் மக்கள், வங்கிக் கணக்கு விவரங்களைத் தெரிவிக்கக் கூடாது என்றே கருத்துக் கூறியுள்ளனர்.

சர்வதேச நெருக்குதல்கள் எதற்கும் சுவிஸ் அரசு பணிந்து விடக் கூடாது. வங்கிகளில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்களின் இரகசியங்களைப் பாதுகாக்கும் விஷயத்தில் இப்போது உள்ள கொள்கைகளையே தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என்று அந்நாட்டு மக்கள் கூறியுள்ளனர்.

# இராணுவத் தடைகளை தளர்த்தியது அவுஸ்திரேலியா




மியன்மாருக்கு எதிரான சில இராணுவத் தடைகளை அவுஸ்திரேலியா தளர்த்தியுள்ளது.நாட்டில் முன்னெடுக்கப்பட்டுள்ள மறுசீரமைப்புக்களை கருத்திற் கொண்டு இந்தத் தடைகள் தளர்த்தப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லாட் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்துள்ள மியன்மார் ஜனாதிபதி தெய்ன் செய்னுடன் அந்த நாட்டுப் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஜூலியா கில்லாட் இதனைக் கூறியுள்ளார்.

எனினும் மியன்மாருக்கான ஆயுத ஏற்றுமதி தடை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.1974 ஆம் ஆண்டிற்கு பின்னர் முதல் முறையாக மியன்மார் தலைவர் ஒருவர் அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆயுத ஏற்றுமதியில் சீனா ஐந்தாம் இடம்



உலகில் அதிகளவில் ஆயுதங்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் சீனா ஐந்தாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.


2008 மற்றும் 2012 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப் பகுதியில் சீனாவின் ஆயுத ஏற்றுமதி 162 வீதத்தால் உயர்வடைந்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.இதுவரை காலமும் ஐந்தாம் இடத்தில் இருந்த பிரித்தானியாவை பின்தள்ளி, சீனா இந்த இடத்தைப் பிடித்துள்ளது.

இந்தப் பட்டியலில் அமெரிக்கா முதல் இடத்திலும், ரஷ்யா இரண்டாம் இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் மூன்றாம் மற்றும் நான்காம் இடங்களைப் பெற்றுள்ளன

# ஆயுத வர்த்தக உடன்படிக்கை பேச்சுவார்த்தை நியூயோர்க்கில்

ஆயுத வர்த்தக உடன்படிக்கை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நியூயோர்க்கிலுள்ள ஐக்கியநாடுகள் சபையின் தலைமையகத்தில் 150 இற்கும் அதிகமான உலகநாடுகளின் பிரதிநிதிகள் ஒன்று கூடியுள்ளனர்.ஒழுங்குபடுத்தப்படாத ஆயுத விற்பனையை முடிவுக்கு கொண்டு வருவதற்கென இந்த

உலகச் செய்திகள்




உடன்படிக்கைக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆயுத வன்முறைகள் காரணமாக ஒவ்வொரு நிமிடமும் மனிதர்கள் உயிரிழப்பதாக ஆயுத கட்டுப்பாடு தொடர்பான பிரசாரம் செய்வோர் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கூறியுள்ளனர்.

இவ்வாறான சட்டவிரோத ஆயுத பரவல் யுத்தத்தை அதிகபடுத்துவதாவும், மனித உரிமை மீறல்களுக்கு வழி வகுப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கை குறித்து மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த கடந்த டிசம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு பேரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

# கனடாவில் கைதிகள் தப்பியோட்டம் பொலிஸார் மடக்கிப் பிடிப்பு



கனடா நாட்டுச் சிறையிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் தப்பிய கைதிகள் மீண்டும் பிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.கனடாவின் மொன்ட்ரியல் நகர சிறையில் பெஞ்சமின் ஹூபோன (வயது 36) டேனி புரொவிங்கல் (வயது 33) உள்ளிட்ட கைதிகள் அடைக்கப்பட்டிருந்தனர்.


அதன்படி அவரது நண்பர்கள் கடந்த 17ஆம் திகதி, தனியார் சுற்றுலா ஹெலிகொப்டரை வாடகைக்கு அமர்த்தினர். விமானியை துப்பாக்கிமுனையில் மிரட்டி ஹெலிகொப்டரை சிறைக்கு மேலே பறக்குமாறு கட்டளையிட்டனர்.சிறையில் தயாராய் இருந்த டேனி, பெஞ்சமினையும் தன்னுடன் வருமாறு கேட்டுக் கொண்டார். முதலில் தயங்கிய பெஞ்சமின் சிறையிலிருந்து தப்ப சம்மதித்தார். திட்டமிட்டபடி, ஹெலிகொப்டரிலிருந்து வீசப்பட்ட கயிறு ஏணியைப் பிடித்து ஏறி அவர்கள் தப்பிச்சென்றனர்.

பகல் நேரத்தில் பலர் முன்னிலையில் நடந்த இந்தத் துணிகர நிகழ்ச்சியை பார்த்த மற்றக் கைதிகளும் பொலிஸாரும் அதிர்ச்சியடைந்தனர்.இதையடுத்து தேடுதல் வேட்டையில் இறங்கிய பொலிஸார், அருகில் உள்ள செயின்-ஜெரோம் நகரில் மறைந்திருந்த கைதிகளை கைது செய்தனர்.

# சிரிய போர் விமானங்கள் லெபனானில் குண்டு வீச்சு



சிரிய இராணுவத்தின் விமானப் படைகள் நேற்று முன்தினம் லெபனான் எல்லை மீது திடீர் விமானப்படைத்தாக்குதலை நடத்தியுள்ளது.சிரியா - லெபனான் எல்லையில் உள்ள அர்சல் நகர் மீது சிரிய விமானப்படையைச் சேர்ந்த போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்ததாக லெபனான் அரசுக்கு சொந்தமான செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.இச்சம்பவத்தினால் ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் சேதம் குறித்த தகவல்கள் ஏதும் வெளியிடப்படவில்லை.



சீனாவில் உள்ள மலைப்பகுதியில் காணப்படும் உணவகத்தின் சிறப்பியல்பு என்னவென்றால் பெரும்பகுதி மலையில் அந்தரத்திலே அமைக்கப்பட்டுள்ளது, ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தால் பலநூறு அடி உயரமான மலையின் அடிப்பகுதி தெரியும்.

இதன் நுழைவுப்பகுதி மிகவும் தில்லானது. மலையின் செங்குத்தான மேற்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள வாசல் மூலமாகவே உள்ளே நுழைய வேண்டும். 1127-1279 காலப்பகுதியில் மலைவாழ் மக்களின் இருப்பிடமாக இருந்த இப்பகுதி பின்னாளில் சில திருத்த வேலைகளுடன் உணவகமாக மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் கலைஞர்கள் ஒன்றுகூடல்



(முழங்காவில்)

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த எழுத்தாளர்கள், படைப்பாளிகள், நாட்டுக்கூத்து கலைஞர்களைக்கொண்ட கலந்துரையாடல் ஒன்று பூநகரி பிரதேச செயலர் அலுவலகத்தில் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமாரின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்துகொண்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட கலைஞர்கள் தம்மை அறிமுகம் செய்துகொண்டனர்.

ஒவ்வொரு துறைசார்ந்தவர்களும் தமது செயற்பாடு சம்பந்தமாக தெரிவித்ததைத் தொடர்ந்து அவர்களது துறைசார்ந்த பிரச்சினைகள் பற்றி கேட்டறிந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் அங்கு உரையாற்றுகையில் இத்தனை ஆர்வமிக்க கலைஞர்கள இங்கிருந்தும் இக்கூட்டத்தில் கலந்துகொள்வதும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்திருந்து. உங்கள் பிரச்சினைகளை நான் நன்கு அறிந்துகொண்டேன், முதல் நடவடிக்கையாக பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் மூலம் எனது நிதியில் இருந்து மூன்று இலட்சம் ரூபாவை கலைத்துறைசார்ந்த உபகரணங்களுக்காக வழங்கவுள்ளேன் எனத் தெரிவித்தார். இச்சந்திப்பில மாவட்ட அமைப்பாளர் தவநாதன் மாவட்ட கலாசார அலுவர் எஸ்.அருள்ந்திரன், பிரதேச செயலகத்திட்டமிடல் பணிப்பாளர் வி.சொக்கநாதன், பூநகரி கலாசார உத்தியோகத்தர் திருமதி றஜனி நரேந்திராவும் கலந்துகொண்டனர். (112)

# சிறுமி மீது பலாத்காரம்

(வவுனியா)

வவுனியா கள்ளிக்குளத்தில் நேற்று முன்தினம் இரவு 4 வயதுடைய சிறுமி 14 வயதுடைய சிறுவனால் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். உறவு முறையான இச் சிறுவனே இச் செயலில் ஈடுபட்டுள்ளதுடன் பொலிஸார் நேற்று காலை சிறுவனை கைது செய்துள்ளனர்.

இதேவேளை சிறுமி வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

# பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு

(கொழும்பு)

முஸ்லிம்களுக்கு எதிராக நாட்டில் மேற்கொள்ளப்படும் அநியாயங்களுக்கு எதிராக அமைதியான சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கொழும்பிலுள்ள முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பே இந்த அழைப்பினை விடுத்துள்ளது. இதற்கமைய எதிர்வரும் மார்ச் 25 ஆம் திகதி திங்கட்கிழமை நாடளாவிய ரீதியில் முழுநாள் ஹர்த்தாலை அனுஷ்டித்து எமது எதிர்ப்பினை அமைதியான முறையில் வெளியிடுவோம் என முஸ்லிம் உரிமைகளுக்கான அமைப்பு வேண்டியுள்ளது.

தொடரும் இனவாதத்தை தாங்கிக்கொண்டு இன்னும் தூங்குவதா? அமைதியான ஜனநாயக முறையில் எமது எதிர்ப்பை கட்டுவோம் எனும் தொனிப்பொருளிலேயே இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இது தொடர்பிலான துண்டுப்பிரசுரம் நாடளாவிய ரீதியில் நேற்று முதல் விநியோகிக்கப்பட்டுள்ளது. இதனால் நாடளாவிய ரீதியில் எமது வர்த்தக நிலையங்கள் மற்றும் அலுவலகங்கள் ஆகியவற்றை மூடி சகல விதமான செயற்பாடுகளிலிருந்தும் விலகி ஹர்த்தாலை அனுஷ்டிப்போம் என குறித்த துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், இலங்கை முஸ்லிம்கள் மீதான இனவாத கெடுபிடிகளை உடன் நிறுத்து, முஸ்லிம்களின் வாழ்வியல் கலாசார உரிமைகளுக்கு அச்சுறுத்தல் விடுக்காதே, சிங்கள - முஸ்லிம் சமாதானத்தை சகவாழ்வை சீர்குலைப்போரை சட்டத்தின் முன்நிறுத்து மற்றும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்த வேண்டிய அரசாங்கமே கண்ணை மூடிக்கொண்டிருக்காதே ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

# ஹலால் இறுதித் தீர்மானம் பௌசியின் கையில்

ஹலால் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் சிரேஷ்ட அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசிக்கு வழங்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொழும்பில் நேற்று இரவு இந்த கூட்டம் இடம்பெற்றுள்ளது. இதன்போதே ஹலால் விவகாரம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

பல மணி நேரங்களாக இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் ஹலால உட்பட முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பிரசாரங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.வெளிநாட்டு உற்பத்திப் பொருட்களுக்கு மாத்திரமே ஹலால் சான்றிதழ் வழங்குதல் என அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா அண்மையில் அறிவித்திருந்தது.

# பௌத்த பிக்குனி உண்ணாவிரதம்

தமிழ்நாட்டில் பௌத்த பிக்குகள் தாக்கப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்து எம்பிலிபிட்டிய பஸ்தரிப்பிடத்திற்கு முன்பாக பௌத்த பிக்குனி ஒருவர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். எம்பிலிபிட்டியப் பகுதியில் தற்போது மழை பெய்வதாகவும் அதனையும் பொருட்படுத்தாது பிக்குனி உண்ணா விரதம் இருந்து வருவதாகவும், நேற்றுக் காலை தொடக்கம் இந்த உண்ணா விரதம் மேற கொள்ளப்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# விமான சேவைகள் திடீர் குறைப்பு

(கொழும்பு)

சென்னைக்கான விமான சேவையினை ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் குறைத்துள்ளது. தமிழ் நாட்டில் இலங்கையர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நடவடிக்கையினை அடுத்தே இந்தக் குறைப்பு இடம்பெற்றுள்ளது.

நாளை வியாழக்கிழமை முதல் அமுலாகும் இந்த குறைப்பின் ஊடாக வாரத்திற்கு 28 தடவைகள் மேற்கொள்ளப்பட்ட விமான சேவைகள் 14 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

## கவிழாது ஆட்சி...

பெரும்பான்மை தொடர்ந்தும் கூட்டணி அரசாங்கத்திடம் இருப்பதாக அவர் இந்திய ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, கூட்டணி அரசாங்கம் தடையின்றி தொடர்ந்தும் செயற்படும் எனவும் இந்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கூட்டணி அரசாங்கத்தில் தொடர்ந்தும் நீடிப்பதால் எவ்வித பயனும் இல்லாமையினால் தமது கட்சி விலகத் தீர்மானித்ததாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.கருணாநிதி நேற்று முற்பகல் தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் பிரேரணையில் எந்தவொரு திருத்தங்களையும் மேற்கொள்வதற்கு இந்திய அரசாங்கத்திற்கு முடியாமற்போயுள்ளதாக கருணாநிதி கூறினார்.

மத்திய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை வகிக்கும் தமது கட்சியின் ஐந்து அமைச்சர்களும் இராஜினாமாச் செய்யவுள்ளதாகவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கருணாநிதி தெரிவித்தார்.

இந்திய மத்திய அரசாங்கத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் 18 உறுப்பினர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கருத்துக்கூற...

போதைக்கு கருத்து எதுவும் சொல்ல இயலாது என்று மட்டும் கூறியுள்ளார். முன்னதாக காங்கிரஸ் கட்சி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இலங்கை விவகாரம் குறித்து விவாதிக்கப்பட்டது. அதில் பேசிய சோனியா காந்தி, இலங்கையில் வாழும் தமிழர்களின் உரிமைக்காக இந்தியா உறுதியான நிலைப்பாட்டுடன் எதிர்க்கும். இலங்கையில் நடந்த போரின் போது தமிழ் இனப் படுகொலையில் ஈடுபட்ட இலங்கை அரசு மீது சர்வதேச விசாரணை நடத்த இந்தியா ஆதரிக்கும் எனத் தெரிவித்திருந்தார்.

## கனேடிய...

கனேடியப் பிரதிநிதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் உள்ளிட்ட பல பிரமுகர்களை சந்திக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மனித உரிமை நிலைமைகளில் மேம்பாடு ஏற்படாவிட்டால் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை பகிஷ்கரிக்கப் போவதாகக் கனேடியப் பிரதமர் ஏற்கனவே அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய...

ஆரம்பித்து வைக்கப்பட்டது. பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதி அமைச்சர் வீரகுமார திசாநாயக்க, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே. காந்த மற்றும் அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் பாரியார் புஸ்பா ராஜபக்ஷ ஆகியோர் இவ் ஆரம்பநிகழ்வில் கலந்துகொண்டனர்.

25 தேசிய கைப்பணியாளர்களது உற்பத்திகள் இக் கண்காட்சியில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. இக் கண்காட்சி 21 ஆம் திகதி வரை நடைபெறும். நாடளாவிய ரீதியில் கைப்பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களது தயாரிப்புகள் இக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சின் செயலாளர் வீ.சிவஞானசோதி, அருங்கலைகள் பேரவைத் தலைவர் புத்தி கீர்த்திசேன உட்பட பல இலங்கை, இந்தியப் பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## யுத்தக்...

அறிக்கையை கடந்த மாதம் சமர்ப்பித்தார்.

அதில், போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரிப்பதாக அளித்த வாக்குறுதியை இலங்கை அரசு மீறிவிட்டதாக குற்றம்சாட்டியுள்ளார். இதையடுத்து பல்வேறு திருத்தங்களுடன் நேற்று வெளியிடப்பட்டுள்ள இறுதி வரைவுத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் தமிழர்கள் வாழும் பகுதியில் இராணுவத்தினரை உடனே அகற்ற வேண்டும். போரின் போது தமிழர்கள் பலர் காணாமல்போனது கவலை அளிக்கிறது. போர்க்குற்றம் தொடர்பாக இலங்கை அரசே விசாரணை நடத்தவேண்டும். எல்.எல்.ஆர்.சி. பரிந்துரைகளை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். இலங்கை தமிழர்களுக்கு வாழ்வாதாரம், நீதி ,நல்லிணக்கம் முழுமையாக செயல்படவில்லை. மக்கள் நலன் சார்ந்த அமைப்புகளை இலங்கை அரசு வலுப்படுத்த வலியுறுத்தப்படும். இவ்வாறு அந்த வரைவுத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தீர்மானத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக, இலங்கை அரசின் எல்.எல்.ஆர்.சி. எனப்படும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்த வேண்டும் என தீர்மானத்தில் கூறப்பட்டிருந்த போதிலும், எல்.எல்.ஆர்.சி. திட்டத்தை செயல்படுத்தும் எண்ணம் இலங்கைக்கு இல்லை என கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்று மதியம் அல்லது நாளை தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது..

நேற்று வெளியிடப்பட்டுள்ள இறுதி வரைவுத் தீர்மானம் தமிழர்களுக்கு ஏமாற்றத்தை தான் தந்துள்ளது. உப்புச் சப்பில்லாத இந்தத் தீர்மானத்தினால் இலங்கைத் தமிழர்களுக்கு கிடைக்கப் போவது ஒன்றுமில்லை என்ற கருத்து இப்போது நிலவிவருகிறது.

அதேவேளை செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் விக்டோரியா நூலண்ட் கருத்துத் தெரிவிக்கும்போது எங்களது குழு இலங்கையின் நிலைமை தொடர்பாக ஆர்வத்துடன் இருக்கும் நாடுகளுடன் கலந்துரையாடி வருகிறது. நாங்கள் இலங்கையுடன் தெளிவான நிலையில் உறவைப் பேணி வருகின்றோம். எங்களது பிரேரணைக்கு சிறந்த ஒரு ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்.

இதேவேளை, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் குறிப்பிட்டார். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் பட்சத்திலே சகல பிரச்சினைகளுக்குமான தீர்வினைப் பெற்றுக்கொடுக்க முடியும். இலங்கை அரசாங்கம் அதனை இன்னும் செயற்படுத்தவில்லை. நாங்கள் அது தொடர்பாக தொடர்ந்தும் அவதானம் செலுத்துகின்றோம் என்றும் விக்டோரியா நூலண்ட் தெரிவித்தார.

# பொய்த்துப் போன எதிர்பார்ப்புக்கள் நீர்த்துப்போனது அமெரிக்கப் பிரேரணை

## சர்வதேச மன்னிப்புச் சபை வர்ணிப்பு

AMNESTY INTERNATIONAL
322 EIGHTH AVENUE NEW YORK, NEW YORK 10001

ஜெனிவா தீர்மானத்தை மையப்படுத்தி இலங்கை அரசுக்கு எதிராக பிரசாரம் மேற்கொண்டவர்களின் எதிர்பார்ப்புக்கள் பொய்த்து விட்டதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட தீர்மானமானது இந்தியாவின் அழுத்தங்கள் காரணமாக கைவிடப்பட்டது என்று சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரை முன்னிட்டு மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பில் ஒரு அறிக்கையை தாக்கல் செய்திருந்தார்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணைக்கு தனது அறிக்கை மூலம் அவர் பரிந்துரைத்திருந்தார். இதைத் தொடர்ந்து ஜெனிவாவில் கூடிய ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா முன்வைத்தது.

இந்தத் தீர்மானத்தில் நவநீதம்பிள்ளையின் சர்வதேச விசாரணைக்கான கோரிக்கையை அமெரிக்காவும் வலியுறுத்தியிருந்தது. இந்தத் தீர்மானத்தின் மீது பல்வேறு நாடுகள் இலங்கைக்கு எதிராக கடுமையாகவும் மென்மையாகவும் கருத்துகளை சேர்க்க வலியுறுத்தியிருந்தன. இந்நிலையில், இறுதி அறிக்கை மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

சர்வதேச விசாரணை கைவிடப்பட்டது. தற்போது இறுதியாக வாக்கெடுப்புக்காக முன் வைத்திருக்கும் தீர்மானத்தில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தக் கோருவது என்பது நீக்கப்பட்டுவிட்டது. இதற்கு இந்தியாவின் அழுத்தமே காரணம் என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்தியப் பிரதிநிதி அனந்த பத்மநாபன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை அரசு, வடமாகாணத்தில் தேர்தலை நடத்தப்போவதாக அறிவித்திருப்பதை வரவேற்றும் இலங்கை அரசு அமைத்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் வடக்கில் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் புதியதாக சில வரிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

சர்வதேச சமூகம் இலங்கைக்கு எதிராக ஒரு கடுமையான நிலைப்பாட்டை தொடக்கத்தில் மேற்கொண்டிருந்தது. ஆனால் தற்போது தீர்மானம் முற்றிலுமாக நீர்த்துப்போகச் செய்திருப்பது என்பது இந்தியா - இலங்கை இடையேயான உறவுக்கான வெற்றி. இந்நிலையில், இலங்கைக்கு எதிராக பிரசாரம் மேற்கொண்டவர்களுக்கு தோல்வி ஏற்பட்டுள்ளது என்றும் அனந்த பத்மநாபன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையோ மிகக் கடுமையான ஒரு நிலைப்பாட்டை இலங்கைக்கு எதிராக மேற்கொண்டிருக்கும் நிலையில் இந்தியாவின் செல்வாக்குதான் இலங்கையைக் காப்பாற்றியிருக்கிறது என்றும் அரசியல் பார்வையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இனி இந்திய மத்திய அரசாங்கத்தால் முடியுமா என்ற நிலையில் மறுபுறம் இந்திய மத்திய அரசுக்கு ஒரு நெருக்கடியான சூழ்நிலையை உருவாக்கி இருப்பதால் தீர்மானத்தை இன்னும் வலுவானதாக்க முயற்சிகளை மேற்கொள்ளக்கூடும் என்றும் ஒருசில தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் இறுதித் தீர்மானம் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்தியா கருதுவது போல அவ்வளவு எளிதாக தீர்மானத்தை வலுவானதாக்கிவிட முடியாது.

அப்படியே இந்தியா தீர்மானத்தை சற்று வலுதானதாக மாற்ற விரும்பினாலும் விவாதத்தின் போது வாய்மொழியாகத்தான் கருத்து தெரிவிக்க முடியும் என்று மனித உரிமை ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடி கலைவாணி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய முதல்வர் நா.கருணாகரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக தென்மராட்சியின் பிரதிக்கல்வி பணிப்பாளர் ஆ.சிறிஸ்கந்தமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக தென்மராட்சியின் ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிறிஸ்கந்தராஜா, இப்பாடசாலையின் முன்னாள் அதிபர் லயன். ப.செல்லத்துரை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (9)

## ரணில் மீது சுரேஸ் பாய்ச்சல்



ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைப் பேரவையின் கூட்டத்தொடர் இடம்பெற்று வருகையில், அரசாங்கத்தை பாதுகாக்கும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க செயற்படுகின்றார் என்று, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றம்சாட்டினார்..

அரசாங்கத்தின் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த அனைத்துக் கட்சிக் குழுக்கூட்டத்தினை கூட்ட வேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரம்சிங்க தலைமையிலான எதிரணிக் கூட்டணி அறிக்கை வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்தின் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டு ஒரு வருடத்துக்கு மேலாகிவிட்டது இவ்வளவு காலம் எதிர்க்கட்சித் தலைவர் எங்கிருந்தார் என்பது தெரியவில்லை, இவ்வாறாக இவர் கோரியுள்ளமை அர்சாங்கத்தைப் பாதுகாக்கும் செயற்பாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஈடுபடுகின்றாரா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.



இதேபோல் ஜெனிவா கூட்டம் நடைபெற்று வரும் வேளையில் வேற்றுமையில் ஒற்றுமை எனும் தலைப்பில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் உள்ளடங்கிய கருத்தரங்கொன்றும் கொழும்பில் நடத்தப்பட்டுள்ளமையும் கவனிக்கத்தக்கது என மேலும் குறிப்பிட்டார்.

## யாழ். நகரில் இன்று கண்டனப் பேரணி

(யாழ்ப்பாணம்)

ஜெனிவா தீர்மானத்தை எதிர்த்து இன்று யாழ். நகரில் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்று நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

திருநெல்வேலிச் சந்தியில் இருந்து ஆரம்பமாகும் இப் பேரணி யாழ். நகரத்தை சென்றடையும் என்று தெரிவிக்கப்படுகிறது. இதற்கு பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள், சிவில் அமைப்புக்கள் தமது ஒத்துழைப்பை வழங்கவுள்ளனர்.

## உணவக பணியாளர்களுக்கு மருத்துவப் பரிசோதனை

வவுனியா நகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்திலுள்ள உணவு கையாளும் நிலையங்களில் பணி புரிவோர்களுக்கான மருத்துவப் பரிசோதனைகள் இன்று முதல் மேற்கொள்ளப்படவுள்ளது.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் 20, 22, 23 ஆம் திகதிகளில் காலை 9.00 மணியிலிருந்து மாலைவரை மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக வவுனியா நகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார்.

மருத்துவப் பரிசோதனையில் நெருப்புக் காய்ச்சலுக்கான தடுப்பூசி இடப்படவுள்ளதுடன், வயிற்றுப் புழுவுக்கான சிகிச்சையும் வழங்கப்படவுள்ளது.

எனவே, உணவு கையாளும் நிலையங்களில் பணி புரியும் அனைத்து பணியாளர்களும் கலந்துகொண்டு மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டு சான்றிதழை பெற்றுக்கொள்ளுமாறும் அவர் கூறினார்.

## ஓட்டப்போட்டியில் பங்குபற்றிய மற்றுமொரு மாணவர் உயிரிழப்பு

குளியாப்பிட்டியில் இளைஞர் முன்னணியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட 5,000 மீற்றர் ஓட்டப் போட்டியில் கலந்துகொண்ட 16 வயதான மாணவர் ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். உடுகமவைச் சேர்ந்த மாணவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

800 மீற்றர் ஓட்டத்தை ஓடிய பின்னர் இந்த மாணவர் சரிந்து விழுந்ததாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இவர் குளியாப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது, உயிரிழந்துவிட்டதாகவும் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படுமெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## பாதிரியாருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

சிறுவர் பராமரிப்பு நிலையமொன்றில் மூன்று சிறுவர்களை வயரினால் அடித்து காயப்படுத்திய அந்த நிலையத்தின் பொறுப்பதிகாரியான பாதிரியார் ஒருவரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கண்டியிலுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து பொலிஸ் அவசர அழைப்புப் பிரிவிற்கு கிடைத்த முறைபாட்டின் பிரகாரம், பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்புப் பிரிவினரால் சந்தேகநபரான கிறிஸ்தவ பாதிரியார் கைதுசெய்யப்பட்டார். அவர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டதை அடுத்தே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதியுடன் பாக். தூதுவர் சந்திப்பு



(கொழும்பு)

புதிய பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ள ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரலான ஹாசிம் குர்ஷி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளார்.

இவர் தனது நியமனக் கடிதத்தை நேற்று ஜனாதிபதியிடம் உத்தியோகபூர்வமாக கையளித்துள்ளார். இதன்போதே ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளார்.

இந்த நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராக செயற்பட்ட சீமா இலாஹி பலூச் கடந்த டிசெம்பர் 15 ஆம் திகதி தனது பதவிக்காலம் நிறைவடைந்தமையினால் நாடு திரும்பினார். இதனையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரலான ஹாசிம் குர்ஷி பாகிஸ்தான் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஐயன்குளம் பகுதியில் தாக்குதலுக்குள்ளானவர் மரணம்

(கிளிநொச்சி)

பழைய முறிகண்டி, ஐயன்குளம் பகுதியில் தாக்குதலுக்குள்ளான 3 பிள்ளைகளின் தந்தை ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

கடந்த வெள்ளிக்கிழமை நாகராசா மகேந்திரன் (வயது - 39) என்பவர் மீது அயலவர் ஒருவர் தாக்குதல் நடத்தியுள்ளார். இத்தாக்குதலில் காயமடைந்தவர் மல்லாவி வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கிருந்து வவுனியா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டிருந்தார்.

அங்கு சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் மரணமடைந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக ஒருவரை கைதுசெய்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மார்ச் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.